பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 14 வெள்ளிக்கிழமை 28.03.2025 கதிர் 140

### வடக்கு மக்களது ஆணை தங்களிடம் என

# கொக்கரிக்கும் ஆட்சியாளர்களுக்கு சரியான செய்தியைக் கூறவேண்டும்

### தமிழ் அரசுக் கட்சி செயலாளர் தெரிவிப்பு

வடக்கு மக்களது ஆணை எங்களிடத்தில் இருக்கிறது என கொக்கரிக்கின்ற ஆட்சியாளருக்கு நாம் சரியான செய்தியை சொல்லவேண்டும்.தமிழ்மக்கள்இறைமையை உபயோகிக்கின்றபோது கவனமாக இருக்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்தார்.



வவுனியாவில் தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் நேற்று உரையாற்றினார். ☞ 2

# இலங்கைப் படையினர் மீது தடைகள் தொடரவேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் தொடர்பில் சாட்சி சேகரித்தல் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கு பிரித்தானியா உட்பட பல நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் பல யோசனைகளை முன்வைத்துள்ளன. இந்த யோசனைகள் மற்றும் தீர்மானங்கள் குறித்து இலங்கை ஆளும்தரப்பு எவ்வித முயற்சிகளையும் முன்னெடுக்காத வரை ☞ 2

## குதர்க்கம் பேசிய எம்.பிக்களுக்கு 'சூடு' வைத்த தென்மராட்சி மக்கள்

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சம்பவம்

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலும்சுயேச்சைநாடாளுமன்றஉறுப்பினர் அருச்சுனாவும் ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இளங்குமரனும் குதர்க்கங்களில் ஈடுபட்டதனைச் சகிக்கமுடியாத கூட்டத்திலிருந்த மக்கள் அதற்கெதிராகக் கொதித்தெழுந்து இருவரையும் அடக்கினர்.

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன்தலைமையில்இடம்பெற்றது. ☞ 9

## 'மிலேனியம் சிட்டி' விவகாரம் பொலிஸ் அதிகாரிக்கு விடுதலை

2002 ஆம் ஆண்டு அத்துருகிரியவில் உள்ள 'மிலேனியம் சிட்டி' வீட்டுத் திட்டம் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவால்பராமரிக்கப்பட்டுவந்த ☞ 8

## பிரிட்டன் இரட்டை வேடமாம் அதற்கு வாசுதேவ கண்டனமாம்

காசாவில் இஸ்ரேல் இராணுவம் பெரும் இனப்படுகொலை செய்து வருகிறது. அதற்கு பிரித்தானியா ஆதரவளித்து வரும் நிலையில் 15 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தை அடிப்படையாகக்கொண்டு எமது படையினருக்குதடைவிப்பதுபிரித்தானியாவின் சர்வதேசம் தொடர்பான இரட்டை ☞ 8

## கிழக்கு கூட்டமைப்பு உருவாக்கிய பின்பே தனக்குத் தடை விதிப்பாம்

### கருணா கூறுகிறார்



கிழக்குதமிழ்கூட்டமைப்புஉருவாக்கப்பட்டதையடுத்து எனக்கு பிரித்தானிய அரசு தடைவித்தது ஒரு அரசியல் நாடகம். ஆகவே கிழக்கு மாகாண சபையைத் தவற விடுவோமாக இருந்தால் முஸ்லிம் தலைவர்களுடைய ஆதிக்கம் வளர்ச்சியடைந்து தமிழர்களுடைய நிலப் பிரதேசங்கள்அபரிக்கப்பட்டுஇருப்பேகேள்விக்குறியாகும் என்று முன்னாள் பிரதி அமைச்சரான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளீதரன் ☞ 9

## இனி இது ரகசியம் அல்ல!



முறைகேடான செயற்பாடு மற்றும் ஊழல், அதிகாரத்தை மோசமான முறையில்செயற்படுத்தல், பாரதூரமான முறையில் பொறுப்பில் இருந்துவிலகல்,ஒருதலைப்பட்சமான முறையில் செயற்படல் உள்ளிட்ட 27 குற்றச்சாட்டுக்கள் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது முன்வைக்கப்பட்டுள்ளன.

கொலைக் குற்றச்சாட்டுக்காக மாத்தறை நீதிமன்றத்தால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவரை, நிரந்தரமாகப் பதவி நீக்குவதற்கான நடவடிக்கைகள் நாடாளுமன் ☞ 2

### முக நூல் கருத்துக்களுக்கு மதிப்பளித்து

## நாமலுக்கு எதிரான வழக்கிலிருந்து நீதிபதி விலகினார்

'கிரிஷ்'கொடுக்கல்வாங்கல்தொடர்பாக நாடாளுமன்றஉறுப்பினர்நாமல்ராஜபக்ஷ வுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்து வரும் கொழும்பு மேல்நீதிமன்றநீதிபதிமஞ்சுளதிலகரத்ன, வழக்கில் இருந்து விலகுகிறார் என்று நேற்று அறிவித்தார்.

சனத் பாலசூரிய மற்றும் பொத்தல ஜயந்த ஆகிய இரு நபர்கள் பேஸ்புக்கில் தன்னைப் பற்றி பதிவிட்ட கருத்துகளைத் தொடர்ந்து தான் இந்த முடிவை எடுத்தார் என்று நீதிபதி மஞ்சுள திலகரத்ன நேற்று திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன்படி, வழக்கை விசாரிக்க பொருத்தமானநீதிபதியைநியமிப்பதற்காக அதனைகொழும்புபிரதானமேல்நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திக்கேயிடம் அனுப்பி வைக்கிறார் எனவும் அவர் திறந்த நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்.

## தமிழ் இனவாதிகளினது வாக்கைப் பெறவே 'தடை'

### கம்மன்பிலவின் கருத்து இது

தமிழ் இனவாதிகளின் வாக்குகளை இலக்காகக் கொண்டு இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு தளபதிகள் மூவருக்கு எதிராக பிரித்தானியா தடைவிதித்துள்ளது. இராணுவ தளபதிகள் மீது பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை பாரதூரமானதுடன், நாட்டுக்கும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விடயத்தில் ஆளும்தரப்பின் நிலைப்பாடு அதிருப்திக்குரியதென பிவிதுரு ஹெல உறுமயகட்சியின்தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

சர்வஜன கட்சிக் காரியாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் ☞ 8

## தடையை நிராகரிக்கிறேன் இது சர்வதேசத்தின் சூழ்ச்சி

### துள்ளிக்குதிக்கிறார் வரந்த கரன்னகொட

''எமக்கு எதிரான அநீதியான தடையை முற்றாக எதிர்க்கிறேன். இந்த தடை நீதியைப் பற்றியதல்ல மாறாக சர்வதேச அரசியல் சூழ்ச்சியின் நேரடி விளைவு. இத்தடைகள் எனது பாரம்பரியத்தையோ அல்லது இந்த தேசந்தஉண்மையாகபாதுகாத்தவர்களின் பாரம்பரியத்தையோ வரை ☞ 2

## ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரால்தான் படையினருக்கு எதிராக தடை வருகிறது

### கொதிக்கிறார் தொலவத்த எம்.பி.

ஜனாதிபதி,பிரதமர்,அயலுறவுத்துறை அமைச்சர் ஆகியோர் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக சர்வதேச மாநாடுகளை புறக்கணிப்பதன் ஒரு விளைவாகவே பாதுகாப்பு படையினருக்கெதிரான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்தவிவகாரத்தில் ஜனாதிபதியும்பிரதமரும்வெளிவிவகார அமைச்சரும்நிறைவேற்றியவேண்டிய பொறுப்புக்களை தட்டிக்கழித்து, இப்போது அதிருப்தி வெளியிடுவதால் பயன்இல்லையெனமுன்னாள் ☞ 8

## பொன்சேகாவுக்கு தடை விதிக்காமல் இருப்பதால் பிரிட்டன் மீது சந்தேகம்

### இப்படிச் சொல்கிறார் விமல் வீரவன்ஸ

விடுதலை புலிகள் அமைப்பை முப்படையினர் இல்லாதொழித்ததால்தான் ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்க உட்பட அரசியல்வாதிகள் வடக்கு மற்றும் கிழக்குக்கு தைரியமாகச் செல்கிறார்கள். பிரித்தானியாவின் தடையை வன்மையாக கண்டிக்கும் தற்றுணிவு ஆளும்தரப்புக்குக் கிடையாது. முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவுக்கு பிரித்தானியா தடைவிதிக்காமல் இருப்பது சந்தேகத்துக்குரியது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் ☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

றத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான யோசனை நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கமைய எதிர்வரும் ஏப்ரல் மாதம் எட்டு அல்லது ஒன்பதாம் திகதியளவில் நாடாளுமன்றத்தில் குறித்த யோசனையை சமர்ப்பித்து நிறைவேற்றிக் கொள்ள ஆளும்தரப்பு உத்தேசித்துள்ளது.

முதலில் தேசபந்துவிற்கு எதிராக விசாரணைக் குழுவொன்றை அமைத்து, பொலிஸ் மா அதிபரைப் பதவி நீக்குவது குறித்து சாபாநாயகரிடம் நாடாளுமன்ற உறுப்பினர்களில்மூன்றிலொருபகுதியினரின் கையொப்பங்களுடன் கோரிக்கை முன்வைக்கப்பட்டால் போதுமானது.

2002ஆம் ஆண்டு 5ஆம் இலக்க அலுவலர்களை பதவி நீக்கம் செய்யும் (நடைமுறை ) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய சபாநாயகரால் உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் மூவரடங்கிய குழு நியமிக்கப்படும். குறித்த குழுவின் விசாரணை அறிக்கையைத் தொடர்ந்து பதவி நீக்கல் தொடர்பான யோசனை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பொலிஸ்மா அதிபரை ஜனாதிபதி உடனடியாக பதவி நீக்க வேண்டும்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ்மாஅதிபர்தேசபந்துதென்னகோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான யோசனையை ஆளும் தரப்பின் 115 உறுப்பினர்களின் கைச்சாத்துடன் செவ்வாய்க்கிழமை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

முறைகேடான செயற்பாடுகள், பதவியின் அதிகாரங்களை துஸ்பிரயோகம் செய்தமை, கடமையினை முறையாக செயற்படுத்தாமை மற்றும் பதவியில் இருந்துக் கொண்டு ஒருதலைப்பட்சமாக செயற்பட்டமை உள்ளிட்ட நான்கு பிரதான விடயங்களை முன்னிலைப்படுத்திஆளுங்கட்சியானதேசிய மக்கள் சக்தி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனைபதவிநீக்கும்யோசனையை சபாநாயகரிடம் முன்வைத்துள்ளது.

மாத்தறை வெலிகம ஹோட்டல் மீது துப்பாக்கிச்சூட்டு பிரயோகத்தை மேற் கொண்டமை, 2022.05.09ஆம்திகதியன்று காலி முகத்திடல் போராட்டக்களத்தின் மீது தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களும் இந்த யோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மாத்தறை வெலிகம ஹோட்டல் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்தின் கட்ட ளையை ஏற்றுக்கொள்ளாமை, பிடியாணை யைக் கருத்திற் கொள்ளாமல் தலைமறை வாகியிருந்ததை குறித்த குற்றச்சாட்டுக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முன்னாள் பொலிஸ் மா அதிபரைப் பதவி விலக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கும் யோசனை நாடாளுமன் றத்தில் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப் படவேண்டும். குறித்த யோசனை நிறைவேற் றப்பட்டவுடன், முன்வைக்கப்படும் குற்றச் சாட்டுக்களை ஆராய்வதற்கு விசேட குழு வொன்று நியமிக்கப்படும்.

2002ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க அலுவலர்களை பதவி நீக்கம் செய்யும் (நடைமுறை) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பிரதம நீதியரசரால் பெயர் குறிப்பிடப்படும் உயர் நீதிமன்ற நீதியரசர், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் சட்டம் அல்லது அரசநிர்வாகமுகாமைத்துவதுறையில் விசேட தேர்ச்சி பெற்றவர் குறித்த குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டும்.

சட்டம் மற்றும் அரச நிர்வாக, முகாமைத்துவத்தில் தேர்ச்சிப் பெற்ற ஒருவரை பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரின் அனுமதியுடனேயே சபாநாயகர் குழுவின் உறுப்பினராக சபாநாயகர் நியமிக்க வேண்டும். பிரதம நீதியரசரினால் பெயர் குறிப்பிடப்படும் உயர்நீதிமன்ற நீதியரசர் இந்த குழுவின் தலைவராகச் செயற்படவேண்டும்.

சபாநாயகரால் நியமிக்கப்படும் விசேட குழுவின் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டிருந்தால் அந்த பதவியை வகிக்கும் நபரைப் பதவியில் இருந்து நீக்கும் யோசனையை நாடாளுமன்றஒழுங்குப்பத்திரத்தில்உள்ளடக்க சபாநாயகருக்கு அதிகாரமளிக்கப்படும்.

குறித்த யோசனை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடன் நிறை வேற்றப்பட்டதன் பின்னர் குற்றஞ்சாட்டப்பட்ட நபரை ஜனாதிபதி உடனடியாக பதவி நீக்க வேண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்துக்குமுழுமையானஆதரவளிப்பதாக எதிர்க்கட்சித் தலைவரும் குறிப்பிட்டுள்ள நிலையில், பிரேரணை அனேகமாக நிறைவேறும்சாத்தியங்களேஅதிகம்உள்ளன. நாடாளுமன்றத்தில் இந்தப் பிரேரணையை எதிர்க்கக்கூடியவர்கள் இப்போதைக்கு நாமல் ராஜபக்ச தரப்பினர் மட்டுமே. முன்னாள் நீதியரசர்ஷிராணிபண்டாரநாயக்கவிடயத்தில் தமது ஆளும்தரப்பினர் விட்ட தவறை தேசபந்து தென்னக்கோன் விடயத்தில் இந்த ஆளும்தரப்புச் செய்யக்கூடாது என்று நாமல் ஏற்கனவே குமைந்துள்ளார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கொக்கரிக்கும்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு ஆட்சி மாற்றத்தினால் மக்களது வாழ்க்கையில் எதுவித மாற்றமும் நிகழப் போவதில்லை என்கின்ற சந்தேகம் தற்போது மக்களிடம் வந்துள்ளது. 6 மாத காலத்திற்குள்ளேயே அந்தச் சந்தேகம் வந்துள்ளது. மக்களின் நம்பிக்கை வீண் போகின்ற வகையிலேயே இந்த ஆட்சியின் செல்நெறி உள்ளது.

பொறுப்புக்கூறல்சம்மந்தமாகபலசர்வதேச தலைவர்களுடன் பேசி, பல விதமான பொறிமுறைகள் ஊடாக அழுத்தங்களை நாம் கொடுத்திருக்கின்றபோது, தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் அந்தக் காலத்தில் எதிர்ப்பு ஏதும் இல்லாமல் பேசாமல்தான் இருந்தார்கள். 2016, 2017ஆம் ஆண்டுகளில் காணாமல்போனவர்களுக்கான அலுவலகத்தை அமைக்க நாடாளுமன்றத்தில் நாம்செயற்பட்ட போது எங்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள். அது குறித்துப்பேசினார்கள். நிலம் விடுவிக்கப்பட வேண்டும் என்றார்கள். பயங்கரவாத தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்என்பதில்எங்களைவிடக்கூடுதலாக சொன்னார்கள். அந்த நிலமைகள் 6 மாத காலத்திற்குள் தலைகீழாக மாறிவிட்டது. எதிர்கட்சியில் இருந்ததைப் போல் அவர்கள் இப்போது இல்லை.

எனவே, வடக்கு மக்களது ஆணை எங்களிடத்தில்இருக்கிறது எனகொக்கரிக்கின்ற ஆட்சியாளருக்கு நாம் சரியான செய்தியைச் சொல்லவேண்டும். இறைமையைஉபயோகிக் கின்றபோதுகவனமாகஉபயோகிக்கவேண்டும். தமிழ் மக்களது ஆணை வந்து விட்டது. தீர்வு நாங்கள் கொடுப்பதுதான் என அவர்கள் சொல்ல தலைப்படுவதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இந்த உள் ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டு நடந்திருக்கவேண்டிய தேர்தல். முன்னர் நடந்திருக்க வேண்டியது. காலம் தாழ்த்தி தற்போது நடைபெறுகிறது. இந்தத் தேர்தல் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நடந்திருந்தால் அப்பொழுது நாட்டில் இருந்த சூழ்நிலை சற்று வித்தியாசமானதாக இருந்திருக்கக்கூடும். ஆனால் தற்போது இந்த தேர்தல் நடைபெறும் சூழ்நிலையில் எங்களுக்கான சவால்கள் அதிகமாக இருக்கின்றன.

புதிய சவால்களை எப்படி எதிர் நோக்குவது என்றுயோசித்துசெயலாற்றவேண்டியநிலையில் இருக்கின்றோம். மக்கள் மத்தியில் பாரம் பரிய கட்சிகளுக்கு எதிரான ஒரு மனப்பாங்கு உருவாகி இருக்கிறது. பொதுவாக இந்த நாட்டை குட்டிச் சுவர்களாகியது நீண்டகாலம் இருந்த கட்சிகள் என அங்கலாய்த்து, அடிப்படையான மாற்றம் தேவை என்றுதான் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அரசியல் நிலையில் முன்எப்போதும் இல்லாத மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் ஒரு எதிர்பார்ப்போடு இந்தமாற்றங்களைகொண்டுவந்திருந்தார்கள். எவரிடமும் நம்பிக்கை வைத்து கொண்டு வந்தார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் முன்பு இருந்தவர்களிடம் நம்பிக்கை இழந்தமையால்தான் அந்த மாற்றம் நிகழ்ந்திருக்கின்றது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தொடர்ச்சியாகத் தங்களுக்காகச் சேவையாற்றிக் கொண்டிருக்கிறது என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். அதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் தமது உடனடித் தேவைகளை தீர்க்கின்ற அளவில் செயற்படுகின்றோமா எனபது பற்றி மக்கள் மத்தியில் ஒரு கேள்வி இருக்கிறது. நாங்கள் எமது இனத்தின் விடுதலைக்காக உருவாக்கப்பட்ட கட்சி. அதை நாங்கள் செய்கின்றோம். அதை நாங்கள் சொல்கின்றோம். ஆட்சி அதிகாரங்கள் எமது கைகளில் வந்து சேர வேண்டும் என்பதே எமது பிரதான இலக்கு. தமிழ் மக்களின் கைகளில் வர வேண்டும் என 75 வருடமாக உழைக்கின்ற, முயற்சி செய்கின்ற ஒரு கட்சி. அதில் மக்களுக்கு சந்தேகம் இல்லை.

அதை செய்கின்ற அதேவேளை, மக்களையும் நாம் தீர்க்கவேண்டியிருக்கிறது என்பதைநாம்நன்குஉணர்ந்திருக்கின்றோம். நாளாந்தப் பிரச்சினைகள் பல உள்ளன. உள்ளூராட்சி மன்றங்களிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் நாளாந்தப் பிரச்சனைகளை சந்திக்கக் கூடியதான அதிகாரங்கள். ஆகையினால்தான்உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை எம்மிடம் மட்டுமே தாருங்கள் என்று கேட்கிறோம். மக்களுடைய நாளாந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கின்ற வகையில் அதிகாரங்கள் எமது கைகளில் வருகின்றபோது நாம் திறம்படச் செயலாற்றுபவர்கள் என்பதை மக்களுக்கு காண்பிக்க முடியும். அதை நாங்கள் செய்வோமா இல்லையா என்கிற கேள்வில் பலரிடம் இருக்கின்றது. ஏனெனில், எமது வாய்களில் இருந்து வருகின்ற வார்த்தைகள் எல்லாம் எமது விடுதலை பற்றியதும், அதிகாரப் பகிர்வு பற்றியதும், தேசத்தின் விடுவிப்பு பற்றியதாகவும்தான் இருக்கிறது. அது தவறில்லை. அதற்காகத்தான் நாங்கள் இருக்கின்றோம். அதற்காகப் பேசுகின்ற, அதேவேளைஅடிமட்டத்தில்மக்களதுநாளாந்த பிரச்சினைகள் சம்மந்தமாக உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கொடுத்திருக்கின்ற அதிகாரங்களையும் நாம் பிரயோகிக்க வல்லவர்கள் என்பதையும் காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அந்த அதிகாரங்களைக் கையாளத் தெரியாதவர்கள் என்று மக்கள் நினைத்தால் அரசியல் அதிகாரங்களைக் கோருவது தேவையற்றது எனவும், சரியாகக் கையாண்டால் இவர்களிடம் கொடுப்பது நல்ல விடயம் எனவும் கருதுவார்கள். உள்ளூராட்சி சபைக்கு அதிகாரங்கள் இருக்கின்றன. அதைக் கேட்டுப் பெறவேண்டியதில்லை. மாகாண சபைக்கு அதிகாரங்களை கேட்டுபெறவேண்டும். சமஷ்டிக்காக உழைக்கின்றோம்.

கிழக்கில் மட்டக்களப்பை தவிர, நிலமை மோசமாக உள்ளது. வடக்கில் இருந்து வரும் செய்தி மிக முக்கியமான செய்தியாக இருக்க வேண்டும். மாநகரசபைகளின்ஆட்சிஅதிகாரம் முக்கியமானவை. அதன் சொல்லிலேயே ஒரு அடையாளம் இருக்கிறது. அது எமது கைகளில்அவை இருக்கவேண்டும். அதற்காக அனைவரும் உழைக்கவேண்டும் - என்றார்.

## தடையை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யறுக்காது" என்றுமுன்னாள்கடற்படைத்தளபதி வசந்தகரன்னாகொடகேள்வியெழுப்பியுள்ளார்.

பிரிட்டனின் தடை அறிக்கை வெளியாகி மூன்ற நாள்களின் பின்னர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

பல தசாப்தங்களாக நான் நாட்டுக்காக அயராது அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளேன். எமது இறையாண்மையைப் பாதுகாப்பதற்கும் எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளேன்.

போர்க்களத்திலோ, தேசிய பாதுகாப்பு விடயங்களிலோ அல்லது சர்வதேசநாடுகளின் தலையீட்டின் போது நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பட்ட சவாலான சந்தர்ப்பங்களிலோ நான் அதற்கு எதிராக முன்னின்று செயற்பட்டேன்.

இராணுவத்தின் முன்னாள் தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட எம் மூவருக்கும் எதிராக பிரித்தானிய ஆளும்தரப்பு முன்வைத்த இந்த தடையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனை நான் முற்றாக நிராகரிக்கிறேன். இந்தத் தடை உத்தரவு நீதியானது அல்ல. மாறாக அது சர்வதேச அரசியல் சூழ்ச்சியாகும்.

இலங்கை வேண்டும் என்றே போரைக் கோரவில்லை. ஆனால் பயங்கரவாதம் எமது தேசத்தை சிதைக்க முற்பட்டபோது எமக்கு வேறு வழி இருக்கவில்லை. உலகில் உள்ள பயங்கரவாத அமைப்புகளில் ஒன்றாக கருதப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு பல தசாப்தங்களாக அப்பாவிப் பொதுமக்களை அச்சுறுத்தி, துன்புறுத்தி, படுகொலை செய்தது. தற்கொலை குண்டு தாக்குதல்களையும் மேற்கொண்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகம் அமைதியாக இருந்தபோது இந்தக் கொடூரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்என இலங்கை இராணுவம் கடினமான தீர்மானத்தை எடுத்திருந்தது. இறுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டது. இந்த வெற்றியில் இலங்கை கடற்படைத் தளபதியாக நான் ஆற்றிய சேவையையிட்டு பெருமையடைகிறேன்.

பயங்கரவாதிகள் இலங்கையை முற்றுகையிட்டபோது தற்போது தடைகளை விதிக்கும் நாடுகள் மற்றும் அமைப்புகள் அப்போது ஒன்றும் செய்யவில்லை. புலிகளின் அட்டூழியங்களை அலட்சியம் செய்தார்கள். போரை முடிவுக்கு கொண்டு வர உயிரை பயணம் வைத்தவர்களிடம் தற்போது பொறுப்புக்கூறலை கோருகிறார்கள். இது உண்மையில் மனித உரிமைகள் பற்றியதா அல்லது அரசியல் செல்வாக்கு பற்றியதா என்ற கேள்வி எழுகிறது.

எமக்கு எதிரான அநீதியான தடையை முற்றாக எதிர்க்கிறேன் .இந்த தடை நீதியைப் பற்றியதல்ல மாறாக சர்வதேச அரசியல் சூழ்ச்சியின் நேரடி விளைவு. இத்தடைகள் எனது பாரம்பரியத்தையோ அல்லது இந்த தேசந்த உண்மையாக பாதுகாத்தவர்களின் பாரம்பரியத்தையோ வரையறுக்காது - என்றுள்ளது.

## இலங்கைப்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுஅரசுகள்தடைகளைதொடர்ச்சியாக விதிக்க வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை போர்க் குற்றம் புரிந்தமை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் வசமுள்ள சாட்சியங்களை பயன்படுத்தவேண்டும் எனவும் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கைஎடுக்கும்நடவடிக்கைதொடர்ச்சியாக கண்காணிக்கப்படவுள்ளது என்றும் அந்த அறிக்கையில், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்தின் துணை இயக்குநரான மீனாட்சி கங்குலியினால் விடுக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலத்தில் மனித உரிமை மீறலில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு முன்னாள் இராணுவ தளபதி ஜெனரால் சவேந்திர சில்வா, முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கு எதிராக பிரித்தானிய அரசு கடந்த திங்கட்கிழமை தடை விதித்தது.

அத்துடன் விடுதலை புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண முன்னாள் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற கருணாவிற்கும் பிரித்தானியா தடை விதித்துள்ளது.

தமிழிழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் 1983ஆம் ஆண்டுமுதல்2009ஆம்ஆண்டுவரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் இரு தரப்பினராலும் பரவலான முறையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதுடன் போர்க் குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளன. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த இலங்கை ஆட்சியாளர்கள் மனித உரிமை மீறல்களை மூடிமறைக்கவும், பொறுப்பானவர்களை பாதுகாக்கவும் முயன்றுள்ளன.

இலங்கையில் உள்நாட்டுப் போரின்போது மனித உரிமைகள் மீறல் மற்றும் அட்டூழியங்களில் ஈடுபட்ட நால்வருக்கு எதிராக தடை விதித்துள்ளதன் ஊடாக பிரித்தானியா இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தை முன்னெடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் தொடர்பில் சாட்சி சேகரித்தல் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கு பிரித்தானியா உட்படப் பல நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் பல யோசனைகளை முன்வைத்துள்ளன.

இந்த யோசனைகள் மற்றும் தீர்மானங்கள் குறித்து இலங்கை ஆளும்தரப்பு எவ்வித முயற்சிகளையும் முன்னெடுக்காதவரை வெளிநாட்டு அரசுகள் தடைகளைத் தொடர்ச்சியாக விதிக்கவேண்டும். இலங்கை போர்க் குற்றம் புரிந்தமை தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் வசமுள்ள சாட்சியங்களை பயன்படுத்த வேண்டும். பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கை எடுக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக கண்காணிக்கப்படவுள்ளது - என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களின் தனித்துவங்கள் பேணிக் காக்கப்படவேண்டும்

## அமைச்சர் சந்திரசேகரன் கூறுகின்றார்

(பாறுக் ஷிஹான்)

தமிழர் தனித்துவம் பேணி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்று கருத்துக்கும் இடமே கிடையாது என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்தார்.

காரைதீவு விபுலானந்தா கலாச்சார மண்டபத்தில் கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது -

காரைதீவு மண் மகத்துவம் வாய்ந்தது. சுவாமி விபுலானந்தர் பிறந்த பெருமை உடையது. காரைதீவு என்பது ஒரு வரலாறு. ஒரு வாழ்வியல். இந்த மண்ணில் கால் பதிக்க வேண்டும் என்கிற எனது மிக நீண்ட நாள் அபிலாஷை இன்றுதான் நிறைவேறி உள்ளது.

காரைதீவு பிரதேச மக்களின் பிரச்சினைகளை நாம் மிக நன்றாக அறிந்து வைத்திருக்கின்றோம். காரைதீவு மண்ணின் தனித்துவம் தொடர்ந்து பேணப்பட வேண்டும். பாதுகாக்கப்பட வேண்டும்.

நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள்தான். ஆனால் தமிழர்கள் தமிழர்களாக வேண்டும். முஸ்லிம்கள் முஸ்லிம்களாக வாழ வேண்டும். சிங்களவர்கள் சிங்களவர்களாக வாழ வேண்டும். இதுதான் அழகு.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் நாடும் மக்களுக்கும் வீழ்ச்சி காண வேண்டி இருக்கும் என்று பய பீதி காட்டினார்கள். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்கள் நலன் சார்ந்த வேலைகளை அர்ப்பணிப்போடு மேற்கொண்டு வருவது கண்கூடு. இந்நாட்டு மக்களின் மனங்களை மாத்திரம் அல்ல வெளிநாடுகளின் நம்பிக்கையையும் நாம் வென்றிருக்கின்றோம். கமிசன் அரசியல் செய்தவர்கள் நாட்டை குட்டிசுவராக்கி விட்டு சென்றுள்ளனர். நாங்கள்தான் நாட்டை நிமிர்த்தி கொண்டிருக்கின்றோம். கமிசன் அரசியல் எங்களிடம் இல்லை. வீண் விரயங்கள் மற்றும் செலவுகள் இல்லை.





எமது ஆட்சியில் இலங்கை ரூபாவின் பெறுமதி ரொம்ப ரொம்ப குறைந்து அமெரிக்க டொலரின் பெறுமதி உச்ச பட்சமாக அதிகரித்து விடும் என்று பொய் பரப்பினார்கள். அவற்றை பொய்ப்பித்து இருக்கின்றோம். மிக குறுகிய காலத்துக்குள் நாட்டை சீராக நடத்தி கொண்டிருக்கின்றோம். ஜனாதிபதி தோழர் அனுர குமார திசநாயக்கவின் சிந்தனையில் மாணவர்கள், தாய்மார், இளையோர்கள், முதியவர்கள் என்று எல்லோருக்குமான நலன்புரி வேலை திட்டங்களையும் எமது அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. சீனா உட்பட உலக நாடுகள் எமது மக்கள் நலன் சார்ந்த வேலை திட்டங்களுக்கு பங்களிக்க முன்வந்துள்ளன. மக்கள் நலனே எமக்கு முக்கியம். கடற்றொழில் துறை மேம்படுத்தப்பட வேண்டும். மீனவர்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் பெற வேண்டும்.

எதிர்கால சந்ததியினருக்கு நாம் மிக சிறந்த கடல் வளத்தை கையளிக்க வேண்டும். கடல் வளம் நாசமாக்கப்படுவதையும், சூறையாடப்படுவதையும் அனுமதிக்க முடியாது. சட்ட விரோத மீன்பிடி நாட்டின் எல்லா இடங்களிலும் இடம்பெற்று கொண்டுதான் உள்ளது. சட்டவிரோத மீன்பிடியை முற்றாக இல்லாமல் செய்ய வேண்டும் என்பதில் எமது அரசாங்கம் பற்றுறுதியுடன் உள்ளது. இதன் மிக முக்கிய அம்சமாக சட்டவிரோத மீன்பிடியை இல்லாமல் செய்வதற்காக புதிய சட்டம் ஒன்றை விரைவில் கொண்டு வருகின்றோம்.

இப்புதிய சட்டத்தின் ஏற்பாடுகளின்படி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு 05 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட முடியும். இப்பிராந்தியத்தில் உள்ள மீனவர்களின் பிரச்சினைகளை நாம் அறிவோம். அவற்றை தீர்த்து தர என்னால் ஆன நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவை பொதுமக்கள் தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்று கேட்டு கொள்கின்றோம். நான் சொன்னபடி நடந்து கொள்ளாவிட்டால் என்னை நீங்கள் காறி உமிழ்ந்து சிறுமைப்படுத்தலாம். - என்றார்.

மேலும் மீனவர்கள் உள்ளிட்ட பொதுமக்களின் பிரச்சினைகளை செவிமடுப்பதற்கான சந்திப்புடன் தேசிய மக்கள் சக்தியின் காரைதீவு பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் அடங்கலாக கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களையும் இவர் சந்தித்து பேசினார்.

# பாலஸ்தீன மக்களுக்காக புத்தளத்தில் இன்று துஆ

(சியாஜ்)

புத்தளம் சர்வமத அமைப்பு, புத்தளம் பெரியபள்ளிவாசல், அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா புத்தளம் நகரக்கிளை என்பன சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பலஸ்தீனியர்களுக்கான சர்வதேச குத்ஸ் தினத்தை முன்னிட்டு வெள்ளிக்கிழமை புத்தளம் பெரிய பள்ளிவாசலில் இடம்பெறும் பலஸ்தீன் தொடர்பான ஜும்ஆ பிரசாரங்கத்தைத் தொடர்ந்து பலவந்த ஜனாஸா எரிப்பு விவகாரமும் சேர்த்துக்கொள்ளப்பட்டு துஆப் பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளது.

கொவிட் தொற்று காலப்பகுதியில் மரணித்த இலங்கை முஸ்லிம்களின் ஜனாஸாக்களை சர்வதேச விதிமுறைகளையும் மீறி எரித்ததனால் முஸ்லிம் சமூகத்தின் உரிமை பாதிக்கப்பட்டமை தொடர்பில் அதற்கான நீதி கோரி இன்று வரை குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

இது வரையில் குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகவும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் , சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்குமான கவன ஈர்ப்பின் அவசியம் உணரப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் சிவில் சமூகத்தினராலும் உரிமைச் செயற்பாட்டாளர்களாலும் பிரதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நடைபெற்று வருகின்றது .

அத்தோடு இம்முறை இடம்பெறவிருக்கும் புத்தளம் ஸாஹிறா மைதான நோன்புப் பெருநாள் குத்பாவைத் தொடர்ந்து, ஜனாஸா எரிப்பால் பாதிப்படைந்த முஸ்லிம் சமூகத்தின் மனத்துயரங்களை எமது பிரதேசத்தில் பணியாற்றும் பல்வேறு தலைமைகளுக்கும் எத்திவைத்து அதனூடாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா நகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார்

(ஹலால்தீன் )



கிண்ணியா நகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இப்தார் நிகழ்வு புதன்கிழமை நகர சபை பல் தேவை கட்டடத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா நகர சபை செயலாளர் எம் கே எம் அனீஸ் தலைமையில், இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அதிதியாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம் எச் எம் கனி, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி ஏ எம் அஜித், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி எம் எச் எம் ரிஸ்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடுதான் என்ன?

இலங்கைத் தரைப் படையின் முன்னாள் தளபதிகள் இருவருக்கும் கடற்படைத் தளபதி ஒருவருக்கும் விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி கருணா எனப்படும் முரளிதரனுக்கு எதிராகவும் பிரிட்டன் விதித்துள்ள தடை தொடர்பில் தெற்கு கொதித்துப் போயுள்ளது. அதிலும் ஆளும் தேசிய மக்கள் சக்தி இந்த விடயத்தில் மிக உறுதியான எதிர்ப்பைக் காட்டாததை அடுத்து, அதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பல தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

பிரிட்டனின் முடிவு ஒருதலைப்பட்சமானது, இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு இது எதிமறையான விளைவுகளையேஏற்படுத்தும்என்பதுதான்ஆளும்தரப்பின் அறிக்கையாக இருந்தது. இந்த அறிக்கை சிங்கள, பௌத்த அடிப்படைவாதக் கட்சிகளுக்குப் போதுமானதாக இல்லை. அவர்கள் இந்த விடயத்தில் ஆளும்தரப்பு, குற்றமிழைத்த படையினருக்கு முழு ஆதரவோடு செயற்பட்டு அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்று விரும்புகின்றன.

சிங்களப்போலித்தேசியத்தின்கீழ், குற்றமிழைத்த, அல்லது போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களைப் பாதுகாப்பதற்கு இந்தத் தரப்புக்கள் முனைகின்றன. அப்படிச் செய்வதே சிங்கள பௌத்த தேசியத்திற்கான தமது கடமை என்று இவை மக்களை நம்ப வைக்கப்பார்க்கின்றன. இந்த விடயத்தில் அந்தத் தரப்புக்கள் அனைத்தும் இப்போது ஆளும்தரப்புக்கு எதிராக ஒன்றிணைந்து நிற்கின்றன. ஆளும்தரப்பும் இந்த விடயத்தில் கடந்த காலங்களில் இணங்கிப்போன ஒரு தரப்பே.

படையினருக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் குறித்து உள்நாட்டு விசாரணைகள் நடத்தப்பட்டாலும் அவை உண்மையைக் கண்டறிவதற்காதாக மட்டும் இருக்குமே தவிர, குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதாக அமையாது என்று அரசுத் தலைவராவதற்கு முன்னரே அநுரகுமார திசநாயக்க தெரிவித்திருந்தார். ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களினதும் வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த நிலையில், முற்றுமுழுதாகப் பக்கச் சார்பாக நடப்பதாக வெளிக்காட்டிக்கொள்வதில் அதற்கொரு சங்கடம் இருக்கின்றது. அதையேதான் தனது அறிக்கையில் பிரிட்டனின் தடை நல்லிணக்கத்திற்கான தடை என்று ஆளும்தரப்பு அர்த்தப்படுத்துகின்றது.

தமிழ் மக்கள் நல்லிணக்கத்திற்கான அடிப்படையாக பொறுப்புக்கூறலையும்நீதியையும்எதிர்பார்க்கிறார்கள், அவை வழங்கப்படுவதையே உலக நாடுகளும் ஊக்குவிக்கின்றன. உள்நாட்டுப் பொறிமுறைகள் எப்போதும் சிங்கள, பௌத்த சார்புடையவை என்பதால் அவற்றிடமிருந்து தமக்கு நீதி கிடைக்காது என்று தமிழ் மக்கள் கருதுகின்றார்கள். எனவேதான்உலகவிசாரணைஒன்றைக்கோருகின்றார்கள். ஆனால், உலக விசாரணைக்கு ஒப்புக்கொண்டால் அது தமது படையினரைத் தண்டிப்பதாக அமைந்துவிடும் என்று கருதும் ஆளும்தரப்பும் சிங்கள, பௌத்த பெரும்பான்மை வாதமும், தண்டனை அற்ற உள்ளூர் விசாரணைகள் அல்லது உண்மை அறியும் குழுக்கள் மூலம் இந்தப் பிரச்சினையைச் சமாளித்துவிட முயற்சிக்கின்றன.

இந்த இரு தரப்பினருக்கும் இடையிலான இழுபறியில் ஆளும்தரப்பிடம் தமது அழுத்தத்தை வலுவானதாக்குவதில் சிங்களத் தரப்புக்களின் முழுமையான உரத்த குரலைக் கேட்க முடிகின்றது. ஆனால், தமிழ்த் தரப்பிலிருந்து அத்தகைய ஆணித்தரமான குரலைக் கேட்கமுடியவில்லை. தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் இருவரும் வேறு சில கட்சிகளின் உதிரித் தலைவர்களும் பிரிட்டனின் தடையை உடனடியாக வரவேற்றதற்கு மேலதிகமாக அது தொடர்பான விரிவான உலக விசாரணை ஒன்றுக்கு இலங்கை ஆளும்தரப்பை இணங்க வைப்பதற்கான போதியளவு அழுத்தம் கொடுக்கப்படவில்லை. தமிழ்க் கட்சிகள் விழித்துக்கொள்ளுமா?




## செல்லாத சித்தாந்தங்கள்

என். சத்தியமூர்த்தி

கிழக்கு மாகாணத்தில் கருணா-பிள்ளையான் தலைமைகளின் மீள் இணைப்பிற்கு பின்னர், தாங்கள் மீண்டும் அரசியல் ரீதியாக வெற்றி பெறுவோம் என்ற எதிர்பார்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. என்றாலும், எதிர்வரும் மே 6 உள்ளாட்சி தேர்தல்களில் அவர்கள் எத்தனை ஆசனங்களையோ, அமைப்புகளையோ பெறுகிறார்கள் என்பதை பொறுத்தே, அவர்களுடைய அரசியல் எதிர்காலம் இருக்கிறது.

கருணா - -பிள்ளையான் அணியினரும்கூட வடக்கு மாகாணத்தில் தமிழ் அரசு உள்ளிட்ட இன அரசியல் கட்சிகள், நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியுற்றனர் என்றே விளக்கம் அளித்துள்ளனர். இன்னும் சொல்லப்போனால், கிழக்கு மாகாணத்தில் தமிழ் அரசுக் கட்சி பெற்ற அதிக இடங்களே, தமிழ் அரசியல் மற்றும் சமுதாயத்தின் மானத்தை தேசிய அளவில் காப்பாற்றியது எனலாம்.

இப்போது. ஓரணியாக சேர்ந்துள்ள, இந்த இரு தலைவர்களும், ஓரளவிலாது வாக்குகளை பெற முடிந்தால், அவர்கள் ஏதாவது ஆசனங்களையும் உள்ளாட்சி சபைகளையும் தக்க வைத்துக் கொள்கிறார்களோ இல்லையோ, தமிழ் அரசு உள்ளிட்ட பிற தமிழ் தரப்பினரையும் கிழக்கில் இல்லாதாக்க முடியும். அதாவது, வட மாகாணத்தை போலவே, கிழக்கிலும் தமிழர் வாக்குகள் நாடாளுமன்ற தேர்தலைவிட மேலதிகமாகப் பிரிந்தால், அதன் தாக்கத்தை தமிழர் தரப்பே அனுபவிக்கும்.

### திடீர் தடை

கருணா- - பிள்ளையானின் கூட்டறிவிப்பு வந்த மறு நாளே, ஐக்கிய இராச்சிய அரசு, கருணா மீது பயணத்தடை விதித்தது. மூன்று முன்னாள் படைத் தளபதிகளுடன் கருணாவின் பெயர் நான்காவதாகவே இணைக்கப்பட்டிருந்தாலும், அது என்னவோ கடைசியாக, அவசரஅவசரமாக சேர்க்கப்பட்டதாகவே கிழக்கில் ஒரு தரப்புக் கருதுகிறது.

அதாவது, ஐக்கிய இராச்சிய அரசின் முதல் பட்டியலில் கருணாவின் பெயர் இல்லாத மாதிரியும், அது வலிந்து திணிக்கப்பட்டதாகவும் ஒரு எண்ண உருவாக்கம் (வேண்டுமென்றே?) பரப்பப்படுகின்றது. அதன் பின்னணியில், வட மாகாண தமிழர் தரப்பே இருப்பதாகவும் இந்த குழுவினரால் கருதப்படுகிறது.

எதுஎப்படியோ, கருணா--பிள்ளையான் தரப்பை 'ஒட்டு குழு' என்று இனப்போரின் கடைசி காலத்தில், முத்திரை குத்தி, வட மகாணத்தில் அரசியல் அன்று செய்யப்பட்டது. இன்றும் அதுவே தொடருகிறது. எதிர்காலத்திலும் அவ்வாறாகவே இருக்கும். ஆனால், பிள்ளையான் உள்ளடக்கிய கருணா குழுவினர் அரச இராணுவத்தினருடன் கைகோர்த்து, விடுதலை புலிகள் அமைப்பினரை இனப்போரின் கடைசி காலகட்டத்தில்தாக்கியதாககூறப்படுவது, கிழக்கு மாகாண அரசியலின் ஒரு பகுதிதான்.

அவர்களை 'ஒட்டு குழு' என்று கூறி ஆத்ம திருப்தி அடைபவர்கள், அதற்கு முந்தைய காலகட்டத்தைப் புரட்டிப் பார்க்கவேண்டும். குறிப்பாக, கருணா தரப்பு விடுதலை புலிகளின் வட மாகாணம்சார்ந்ததலைமையிடம்இருந்து பிரிந்து சென்றதற்கான காரணத்தை உணரவேண்டும். அதில் இருந்த நியாயத்தையும்ஏற்றுக்கொள்ளவேண்டும்.

### விடை இல்லை

இனப்போரையும் விடுதலை புலிகள் அமைப்பையும் விட்டுவிடுங்கள். தொன்றுதொட்டே, வடக்கு கிழக்கு தமிழர்கள் இடையேயான பிரிவுகள் மற்றும் பிளவுகள் அனைவரும் அறிந்த விடயம்தான். அது சமூக மற்றும் அரசியல் தளங்களில் நன்றாகவே பிரதிபலித்தது.

சமூக அளவில், வடக்கு வாழ் தமிழர்கள், குறிப்பாக யாழ்பாண அறிவுஜீவிகள் என்று தங்களுக்குத்தாங்களே பட்டம் கட்டிக்கொண்ட வெள்ளாளர்சமூகத்தினர், கிழக்கில் இருந்து பெண் எடுக்கவோ, பெண் கொடுக்கவோ மாட்டார்கள். அவர்களை பொறுத்தவரையில், தங்கள் பகுதியில் வாழும் 'தீவு' மக்களை போலவே, கிழக்கு தமிழர்களும் இரண்டாம் தரம்தான். இது, மதம், ஜாதி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட சமூக அந்தஸ்து சார்ந்த விடயம்.

அதேசமயம், அரசியல் ரீதியாகவும் வடக்கு வாழ் தலைமை, கிழக்கு தமிழர்களை ஓரடி தள்ளியே வைத்திருந்தது என்பதே உண்மை. ஏன், வடக்கு-

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# செல்லாத...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

கிழக்கு என்று ஒரே மாகாணமாக அரசியல் செய்தபோதும், கிழக்கில் இருந்து, வடக்கே நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சம இனத்தவரான சம்மந்தனையே, தோற்கடித்த பெருமை, யாழ்பாண தமிழர்களுக்கு உண்டு. அதனையே, கிழக்கு மாகாண தமிழர்களும் பரிசாக வடக்கு வாழ் தமிழர்களுக்கு அளித்தனர் என்பதும் கூட உண்மை.

இன்னும் சொல்லப்போனால், நாடு சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து நடைபெற்ற 1952ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில், தந்தை செல்வாவே வட மாகாணத்தில் தோல்வியை தழுவினார். அதனை தொடர்ந்தே, அவர் வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்தி அரசியல் செய்ய துவங்கினார் என்று கூறுவோரும் உள்ளனர். ஆனால், இந்த ஒரு காரணத்திற்கும் (?) அப்பால், தந்தை செல்வாவும் முன்னெடுப்புகளை செய்தார். குறிப்பாக, கிழக்கு வாழ் தமிழர்கள் வடக்கிற்கு சமமாக முன்னேற வேண்டுமென்றால், அதற்கு இணைப்பு மட்டும் போதாது, கிழக்கு மாகாணத்திற்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் அரசியல் முன்னெடுப்புகள் செய்யப்பட வேண்டும் என்பதையும் உணர்ந்தே இருந்தார்.

இதன் காரணமாகவும்தான், இணைந்துபட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு திருகோணமலையே தலைநகராக இருக்கும் என்று தந்தை செல்வா அறிவித்தார். அதனை வடக்கு வாழ், 'யாழ்பாண அறிவுஜீவிகள்' எத்தனை தூரம் ஏற்றுக்கொண்டார்கள் என்ற கேள்விக்கு இன்றளவும் விடை இல்லை.

## இரண்டாம் தர போராளிகள்

கருணா தலைமையிலான பிளவு தோன்றும் முன்னரே, அவர் தலைமைத்துவம் நல்கிய விடுதலை புலிகள் அமைப்பின் கிழக்கு அலகு, வடக்கு தலைமை, தங்களை இரண்டாம் தர போராளிகளாகவே கருதி செயல்படுவதாக உள்ளுக்குள் குமுறி கொண்டிருந்தது. அதிலும் குறிப்பாக, வடக்கில் போர்முனைக்கும் முன்னணி படையாளிகளாய் கிழக்கில் இருந்து போராளிகளை அனுப்பவேண்டும் என்ற உத்தரவு அவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

ஒன்று, வடக்கில் உள்ள இளைஞர்கள் போரில் இறந்து விடக்கூடாது என்றும், அவர்களுக்கும் சேர்ந்து, கிழக்குவாழ் போராளிகள் உயிர் தியாகம் செய்ய வேண்டும் என்று தலைமை கருதி செயல்படுவதாக ஒரு கருத்துரு வலுப்பெற்று வந்தது. அதில் உண்மை இருந்ததோ இல்லையோ, அந்த பிரச்சினை குறித்த தனது நிலைபாட்டை வடக்கு தலைமை கடைசி வரை விளக்கி கூறவே இல்லை.

போதாததற்கு, வடக்கில், குறிப்பாக யாழ்பாணத்தில் வாழும் தமிழ் இளைஞர்களின் உயிருக்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில், விடுதலை புலிகள் அமைப்பு, மேலை நாடுகளில் வசித்து வந்த அவர்களின் பெற்றோர்களிடமிருந்து மாதாந்தம் 'வரி' வசூலித்து வந்ததாகவும் செய்திகள் பரவி வந்தன. அதன் காரணமாகவும், மற்ற தமிழ் இளைஞர்களின் உயிரை விட யாழ் இளைஞர்களின் உயிருக்கு. விடுதலை புலிகள் அமைப்பின் தலைமை அதிக மதிப்பு இட்டு வைத்திருந்தது என்ற ஒரு கருத்தும் இருந்து வந்தது.

## கொரில்லா போர்

தொண்ணூறுகளில் யாழ்பாணத்தை குறிவைத்தே, விடுதலை புலிகள் அமைப்பு தனது போர் முன்னெடுப்புகளை மேற்கொண்டது. அதன் காரணமாகவும் அந்த மக்கள் அல்லலுற்றார்கள். இன்றும் சொல்லப்போனால், கடைசி போரில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான அப்பாவி தமிழ் மக்களை மனித கவசமாக பயன்படுத்திய அந்த அமைப்பு, தொண்ணூறுகளிலேயே அந்த கொடுமையை யாழ் வாசிகளுக்கு பரிசளித்தது. அதுவே பின்னர் பிசுபிசுத்தும் போனது.

இந்த பின்னணியில், அடுத்த தசாப்தத்தில், கடைசி போரின்போது, யாழ். நகரை நோக்கி நகராமல், விடுதலை புலிகள் அமைப்பின் போராளிகள், கிளிநொச்சி வழி வன்னியை நோக்கியே பின்வாங்கினர் என்பதும் மனதிற்கு உறுத்தலான விடயம். அதற்கு, வடக்கில் உறவுகளையும் உடைமைகளையும் விட்டுச் சென்றிருந்த புலம்பெயர்ந்தோர்களின் அழுத்தமும் ஒரு காரணம் என்றும் கருதப்பட்டது.

இதற்கான முக்கிய காரணம் கடைசி போரில் அரச இராணுவத்தின் திட்டமிடல் என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால், யாழ். நகரப் பகுதிகளில் 'ஏர்பண் கொரில்லா' தாக்குதலை விடுதலை புலிகள் அமைப்பு மேற்கொள்ளும் என்று எதிர்பார்த்திருந்த அவர்களது சர்வதேச ஆதரவாளர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சி இருந்தது. கடைசி போர் நடந்தேறிய மாதங்களில், யாழ்பாண நகர்புறங்களில், வெடி குண்டு என்ன, ஒரு 'தீபாவளி பட்டாஸ்' கூட வெடிக்கவில்லை.

இவை எல்லாம்தான், கருணா தலைமையிலான கிழக்கு அலகு விடுதலை புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து செல்வதற்கான முக்கிய காரணம். அந்த காலகட்டத்தில், விடுதலை புலிகள் அமைப்பிற்கு வெளியே, பிள்ளையானை யாரும் அறிந்திருக்கவில்லை. ஆனால், வடக்கில் இருந்து வந்த தாக்கீதுகளை ஏற்று கருணா செயல்பட்டிருந்தால், உள்வீட்டிலேயே கலகம் வெடிக்கலாம் என்ற எதிர்பார்ப்புகள் இருந்தன.

அது வெளி உலகிற்கு தெரிந்த அளவிற்கு, விடுதலை புலிகள் அமைப்பின் தலைமைக்கு தெரிந்திருக்கவில்லை என்றும் ஒரு கருத்து நிலவியது. தலைமை மீதான பயப்பிராந்தியே இதற்கு காரணம் என்றும் கூறப்பட்டது. இந்த உண்மையும் தலைமைக்கு தொந்திருக்வில்லை என்பதும் உண்மை.

## அரசியல் நியதி

பொதுவாகவே, எதிர் தரப்பினர் பலவீனமாக இருந்தால், வெற்றி பெற்ற அணியினருள்ளேயே பிரச்சினைகளும் பிரிவுகளும் பிரிவினைகளும் தோன்றும் என்பது நியதி. இது அரசியலுக்கும் இராணுவ செயல்பாடுகளுக்கும் ஒரு சேர பொருந்தும்.

அவ்வாறுதான், இரண்டாது உலக போர் முடிந்து, ஜெர்மனி படு தோல்வியை சந்தித்திருந்த காலகட்டத்தில், வெற்றி பெற்ற அணியினருள்ளே, அன்றைய சோவியத் யூனியனை ஒற்றைபடுத்தி, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட மேலை நாடுகள் ஓர் அணியில் சேர்ந்தன.

இதுவே இலங்கை நிலைமைக்கும் பொருந்தியது. போர் நிறுத்தம் என்ற ஓர் சமநிலை அடைந்தபோது, வெற்றி மமதையில் இருந்த விடுதலை புலிகள் அமைப்பின் உள்ளே, இத்தகைய பிளவு எதிர்பார்க்கப்பட்ட விடயமே. அரசியல் கோட்பாடுகளில் அத்துப்படியான அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, களநிலையையும் உணர்ந்து கொண்டு, விடுதலை புலிகள் அமைப்பு உடைவதற்கு வழி வகுத்தார். அதில் வெற்றியும் பெற்றார்.

அந்த விதத்தில், அன்று கருணா தலைமையில பிளவு ஏற்பட்டிருக்காவிட்டாலும், விடுதலை புலிகள் அமைப்பு இரண்டாகப் பிரிவதற்கு வேறு ஏதாவது காரணம் தோன்றி இருக்கும். அதனை பகுத்தறிந்து, தவிர்ப்பதற்கான முன் முயற்சிகளை எடுப்பதற்கான மனநிலையில், தலைமை இருந்திருக்கவில்லை என்பதே உண்மை.

இதனையெல்லாம் ஊகித்து அறிந்து செயல்பட்டுக் கொண்டிருந்த அன்ரன் பாலசிங்கம், அந்த காலகட்டத்தில், பிரபாகரனை 'தம்பி' என்று அழைப்பதில் இருந்து 'தலைவர்' என்று குறிப்பிட தொடங்கிவிட்டார். பின்னர், 'ஒஸ்லோ உடன்பாடு' தொடங்கி, அவர் ஓரம் கட்டப்பட்டார் என்பதும் உண்மை.

## ஆளும் வர்க்கம்?

இது போதது என்று, அண்மையில் யாழ்பாண மாவட்ட வளர்ச்சி குழு கூட்டத்தில், சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அருச்சுனாவின் அலம்பல் எல்லைமீறி இருந்தது. நாடாளுமன்ற அவைக்குள் அவர் அடிக்கும் லூட்டி ஒரு விதம் என்றால், அன்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இளந்திரையனை கொச்சைபடுத்திப் பேசிய அவரது சொல்லாடல்களும் சரி, அவரது உடல் மொழியும் சரி, அவரது ஆணவத்தையே காட்டியது.

இதற்கு முன்னரே அவர் மலையக தமிழ் மக்கள் மற்றும் முஸ்லீம் இனத்தவர் ஆகியோரை கொச்சைபடுத்திபட பேசிய பேச்சு எல்லாம், தனி மனிதத் தவறுகள் என்ற எல்லையை தாண்டி, 'ஆளும் வர்க்க' அடிநாதத்தின் வெளிப்பாடே என்று சமூகவலைதளங்கள் அலசுகின்றன. அதாவது, யாழ்பாண அறிவுஜீவிகள், குறிப்பாக படித்தறிந்தவர்களே அரசியலில் தலைமையேற்று நடத்தலாம் என்பது போன்ற செல்லாத சித்தாந்தங்களின் ஒட்டுமொத்த உருவமே ராமநாதன் என்று புனைகதைகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

இதேவேகத்தில் போனால், ராமநாதனேகூட, கிழக்குவாழ் தமிழர்களையும் கொச்சைபடுத்தி பேசுவாரோ என்ற கவலை எழுந்துள்ளது. இப்போதே தாங்கள், இரண்டு அல்லது மூன்றாம் தர தமிழர்களாகவே கருதப்பட்டு வருகின்றனர் என்று கிழக்குவாழ் தமிழர்கள் கருதி முடங்கி கிடப்பதில் எண்ணெய் ஊற்றுவதுபோன்று, அத்தகைய நிகழ்வுகள் அமையலாம்.

அவ்வாறு நிகழுமேயானால், அதுவே கருணா-பிள்ளையான் இருவரின் கிழக்கு தமிழர் கூட்டமைப்புக்கான தேர்தல் முழக்கமாக அமைந்துவிடும். ஆனால், அது அவர்களுடைய கையில் இல்லை, ஏன் யோசித்து செயல்படாத மருத்துவர் ராமநாதன் கையிலும் இல்லை.

என்றாலும், அதுவே, சாணக்கியன் முதலானோர், மட்டகளப்பு மாவட்டத்தில் ஏற்றி வைத்துள்ள தமிழ் அரசு மற்றும் தமிழர்களின் தேர்தல் கால ஒற்றுமையை சிதைத்துவிடும். அது தொடங்கி, வடக்கு மற்றும் கிழக்கு இணைந்த தமிழர் அரசியல், அகல பாதாளத்திற்கு பயணப்படுவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. இதுவே எதார்த்த நிலைமை.



# சமாதான நீதிவான்கள் ஒன்றுகூடலும் இப்தாரும்

## புத்தளம் மாவட்டத்தில்

(சியாஜ்)

புத்தளம் மாவட்ட சமாதான நீதிவான்கள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட ஒன்றுகூடலும், இப்தார் நிகழ்வும் புத்தளம் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.



அமைப்பின் புத்தளம் மாவட்ட பணிப்பாளரும், ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தருமான எச்.எம்.சபீக் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மாகாண பணிப்பாளர் எம்.எஸ்.எம்.முஸம்மில் உட்பட அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும்புத்தளம்மாவட்ட சமாதான நீதிவான்களும்கலந்துகொண்டனர்.



இதன்போது புத்தளம் மாவட்ட சமாதான நீதிவான்கள் அமைப்பின் எதிர்காலசெயற்பாடுகள்தொடர்பில் சமாதான நீதிவான்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டன.

சமாதான நீதிவான்களுக்கான செயலமர்வு மற்றும் சமூக மட்ட விழிப்புணர்வு செயலமர்வுகள் உள்ளிட்ட விடயங்களை முன்னெடுப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

மேலும், புத்தளம் மாவட்ட சமாதான நீதிவான்களின் தகவல்கள் அடங்கிய விவரத்திரட்டு புத்தகம் வெளியிடுதல், மக்களுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் சமாதான நீதிவான்களை கௌரவித்தல் அமைப்பின் உத்தியோகபூர்வ ட சேர்ட் அறிமுகம் செய்து வைத்தல் உள்ளிட்ட விடயங்கள்தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இப்தார் நிகழ்வும், விஷேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் நகர கிளை தலைவர் அஷ்ஷெய்க் எம்.பி.எம்.ஜிப்னாஸ் (மிஸ்பாஹி) அவர்களினால் இந்த துஆ பிரார்த்தனை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






# மூதூர் பாட்டாளிபுரக் கிராமத்தில் இலவச நூல் நிலையம் திறப்பு

(ஹலால்தீன்)

மூதூர் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட பாட்டாளிபுரக் கிராமத்தில் இலவச நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

எம் கடமை அமைப்பினர் நடத்தி வரும் இலவசக் கல்வி நிலையத்தில், கல்வி கற்று வரும் பிள்ளைகளின் நன்மை கருதியே இந்த இலவச நூல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நூல் நிலையத்தை அமைப்பதற்க்கான அனுசரணை வழங்கிய அமரர் ராஜா வீரசிங்கம், மகன் டாக்டர் ராஜா பாலா வீரசிங்கம், திருமதி விஜயலட்சுமி ஏகாம்பரம் ஆகியோர் இணைந்து வழங்கி இருந்தார்கள்.

இந்த நிகழ்வில் அமைப்பின் பணிப்பாளர் இ.ஜீவேந்திரன், சமூக சேவையாளர் சற்ச்சிவானந்தம், சமூகசேவையாளர் தோழர் சப்ரான் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# மக்கள் காங்கிரஸின் அரசியல்வாதி முஸ்லிம் காங்கிரஸில் இணைந்தார்

(ஹமீட்)

அட்டாளைச்சேனை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உச்ச பீட உறுப்பினரும், அமைப்பாளரும்,பொதுத்தேர்தல் வேட்பாளரும், தொழிலதிபருமான அமீர், நேற்று(வியாழக்கிழமை) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்ட முதுமாணியுமான அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இணைந்து கொண்டதுடன், எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் கட்சியின் வளர்சிக்கு முழு மூச்சாக தானும் தனது ஆதரவாளர்களும் செயற்படுவதாக தலைவரிடம் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை அமைப்பாளரும், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளருமான உதுமாலெப்பை மற்றும் கட்சியின் உச்சபீட உறுப்பினரும் தேசிய பொருளாளர் றஹ்மத் மன்சூர் மற்றும் கட்சியின் உச்சபீட உறுப்பினரும் அம்பாறை மாவட்ட செயலாளருமான சமால்தீன், கட்சியின் உச்சபீட உறுப்பினரும் பாலமுனை அமைப்பாளருமான அலியாரும் மற்றும் அமீர் அவர்களின் ஆதரவாளர்களும் கலந்துகொண்டார்.



# வவுனியா பல்கலைக்கழகத்தில் வருடாந்த இப்தார் நிகழ்வு

(தில்சாத் பர்வீஸ்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் முஸ்லிம்மஜ்லிசின்தலைமையில்2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இப்தார் நிகழ்வு புதன்கிழமை பல்கலைக்கழக வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

சமூக நல்லிணக்கத்தைக் குறிக்கோளாகக்கொண்டுநடைபெற்றஇந்நிகழ்வில் நோன்பின் முக்கியத்துவத்தை பற்றிய மார்க்க சொற்பொழிவுகள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழக மாணவர்களால் வழங்கப்பட்ட இச்சொற்பொழிவுகள், நோன்பின் ஆன்மீக மற்றும் சமூக பங்களிப்புகளை வலியுறுத்தியது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் முஸ்லிம், தமிழ், சிங்கள மாணவர்கள் மட்டுமின்றி, பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், விரிவுரையாளர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.






# திருகோணமலை மாவட்ட செயலக இப்தார் நிகழ்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் இப்தார் குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமாரவின் தலைமையில் இப்தார் நிகழ்வானது திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இன மத நல்லுணர்வை மேம்படுத்தும் நோக்கிலேயே இஸ்லாமிய மக்களால் கடைப்பிடிக்கும் இப்தார் நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக இந்நிகழ்வு கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது ஸம்ஸம் கிணறு பற்றிய ஆச்சரியமான தகவல்கள் காணொளி மூலமாக காண்பிக்கப்பட்டது.

நோன்பின் விஞ்ஞான ரீதியான விளக்கம், நோன்பின் மகத்துவம் மற்றும் சிறப்புத்தன்மை பற்றி இதன்போது எடுத்து கூறப்பட்டது. மேலும் பாடல் மற்றும் நாடக நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தன. இதன்போது நிகழ்வுகளில் கலந்து கொண்டு தமது திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# தென்கிழக்கு பல்கலையில் ஈச்சம்பழங்கள் வழங்கல்

(அபு அலா)

தென்கிழக்கு பல்கலைக்கழக சம்மாந்துறை வளாக விஞ்ஞானப் பிரிவில்கடமையாற்றும்ஊழியர்களுக்கு நாபீர் பௌண்டேஷனால் நேற்றைய தினம் (வியாழக்கிழமை) ஈச்சம்பழங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நாபீர்பௌண்டேஷனின்தலைவர் பொறியியலாளர்

உதுமான்கண்டு நாபீரின் புதல்வர் நஸீம் ஆரிப் மற்றும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி எம்.எல்.துல்கர் நயீம், சம்மாந்துறை பிரதேச வீரமுனை வட்டார வேட்பாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்று ஈத்தம்பழங்களை வழங்கி வைத்தனர்.





புனிதரமழான்மாதகாலங்களில்குறித்த பௌண்டேஷனால் வருடந்தோறும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இப்தார் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும்

(றமீஸ்)

புனித ரமழான் காலத்தில் மக்களின் ஆன்மீக செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை அல்-இபாதா கலாசார மன்றத்தின் மூலம் 14 ஆவது வருடமாக நடைபெறும் ஹதீஸ் மஜ்லிஸ் நிகழ்வைத் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வும், பரிசளிப்பு வைபவமும் புதன்கிழமை மாலை அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.



நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது சர்வமதத் தலைவர்கள், உலமாக்கள், அரசியல் பிரமுகர்கள், துறைசார் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின்போது கடந்த இருபத்தைந்து தினங்களாக இடம்பெற்று வந்த விஷேட ஹதீஸ் மஜ்லிஸ் வினா விடைப் போட்டியில்; வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.



இதேவேளை இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை ஜம்இயதுல் உலமா சபை தலைவர் யூ.எம். நியாஸ் விஷேட மார்க்க சொற்பொழிவாற்றியதுடன், அக்கரைப்பற்று புதுப் பள்ளிவாசல் பேஷ் இமாம் ஆர்.ஏ.பாரிஸ் றௌழி விஷேட துஆப் பிரார்த்தனையினையும் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமக்கு தெரியாத விடயங்களை தெரியவில்லை எனக் கூறுவதற்குப் பதிலாக, பொறுத்தமற்ற கருத்துக்களைக் கூறி அமைச்சர்கள் அரசுக்கு இழுக்கினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அந்த வகையிலேயே அண்மையில் விபத்துக்குள்ளான விமானப்படையின் விமானம் தொடர்பில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை தோற்கடித்தமை தொடர்பில் எமது பாதுகாப்பு படையினர் மீது சர்வதேசத்தின் மத்தியில் நன்மதிப்பு காணப்படுகிறது. ஆனால் அதனைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலேயே அமைச்சர் பிமல் ரத்நாயக்க விமானப் படையினரின் தவறே விபத்துக்கு காரணம் எனக் குறிப்பிட்டுள்ளார். தாம் ஆளும்தரப்பில் இருக்கின்றோம் என்பதை மறந்து எதிர்க்கட்சி அரசியலிலேயே இவர்கள் இன்றும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

விமானப்படையினர் தொடர்பில் தான் தெரிவித்த கருத்து தவறானது என்பதை அமைச்சர் பிமல் ரத்நாயக்க வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும். ஜனாதிபதியின் செயல்திறன் குறைவாகக் காணப்படுவதால் அவரது செலவுகள் குறைவாகவே காணப்படுகின்றன எனக் காண்பிப்பதிலேயே ஆளும்தரப்பு ஆர்வமாகவுள்ளது.

பிரித்தானியா விதித்துள்ள தடை ஒருதலைபட்சமானது என்பதை நாமும் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இந்த விவகாரத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் நிறைவேற்றிய வேண்டிய பொறுப்புக்களை தட்டிக்கழித்து, இப்போது அதிருப்தி வெளியிடுவதால் பயன் இல்லை. எனவே எதிர்காலத்திலும் இவ்வாறான நிலைமைகள் ஏற்படும் என்பதை நாம் எதிர்பார்க்கவேண்டியேற்படும். பிரிக்ஸ் போன்ற மாநாடுகளுக்கு இவர்கள் சமூகமளித்திருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும்போது இலகுவாக அந்த நாடுகளுடன் இராஜதந்திர ரீதியில் கலந்துரையாடியிருக்க முடியும்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தாம் வெளிநாட்டு பயணங்களைத் தவிர்த்து செலவுகளைக் கட்டுப்படுத்தியிருப்பதாகக் காண்பிப்பதற்காக இவ்வாறான மாநாடுகளை புறக்கணிக்கின்றனர். இவற்றின் விளைவாகவே எம்முடன் கலந்தாலோசிக்காது தடைகள் விதிக்கப்படுகின்றன. ஆளும்தரப்பின் அனுபவமற்ற தன்மையின் வெளிப்பாடுகளே இவையாகும். இதனைவிட இன்னும் பல விளைவுகளை நாம் அனுபவிக்க வேண்டியேற்படும் என்றார்.

## பொன்சேகாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரவன்ச தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் பெரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதப் படுகொலைகளில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டி முன்னாள் பாதுகாப்புப் படைத் தளபதிகளான சவேந்திர சில்வா, வசந்த கரன்னாகொட மற்றும் ஜகத் ஜெயசூரிய ஆகியோருக்கு எதிராக பிரித்தானியா தடை விதித்துள்ளது. அதே போல் விடுதலை புலிகள் அமைப்பில் இருந்து விலகி இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய கருணா அம்மானுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. போர்க் காலத்தில் இராணுவ தளபதியாக சரத் பொன்சேகா பதவி வகித்தார்.

அவரது கட்டளைகளையே சவேந்திர சில்வா, ஜகத் ஜெயசூரிய ஆகியோர் பதவி நிலை அதிகாரிகள் என்ற அடிப்படையில் செயற்படுத்தினார்கள். அவ்வாறாயின் ஏன் சரத் பொன்சேகாவுக்கு பிரித்தானியா தடை விதிக்கவில்லை. விடுதலை புலிகள் அமைப்பினர் கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்வதை அப்போதைய கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவே தடுத்தார்.

1815 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் மனிதப் படுகொலைகளை படுமோசமாக நடத்தி, காடுகளை அழித்து பல்லாயிரக்கணக்கான யானைகளைக் கொன்று, தந்தங்களையும், பெறுமதியான சொத்துக்களையும் கடத்திச் சென்ற பெரிய பிரித்தானியா இன்று மனித உரிமைகள் குறித்து இலங்கைக்குப் பாடம் கற்பிக்கிறது.

விடுதலை புலிகள் அமைப்பின் கொள்கைவாதிகளில் பெருமளவிலானோர் பிரித்தானியாவில் வாழ்கிறார்கள். இவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே பிரித்தானியா தற்போது இந்த தடையை விதித்துள்ளது. விடுதலை புலிகள் அமைப்பின் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் இன்றும் நாட்டில் உள்ளார்கள்.

பிரித்தானியாவில் தற்போதைய முறையற்ற செயற்பாடு, அழிக்கப்பட்ட விடுதலை புலிகள் அமைப்பை உயிர்ப்பிக்கும் வகையில் உள்ளது. கடந்த காலங்களில் நாட்டில் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய தரப்பினர் தேசியத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள். நினைவேந்தல் பகிரங்கமாக அனுஷ்டிக்கப்படுகிறது. பாதுகாப்பு தரப்பு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

சவேந்திர சில்வா, வசந்த கரன்னாகொட, ஜகத் ஜெயசூரிய ஆகியோர் போரை முடிவுக்கு கொண்டு வந்ததால் தான் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க உட்பட அரசியல்வாதிகள் வடக்குக்கு தைரியமாக செல்கிறார்கள், அரசியல் செய்கிறார்கள்.

பிரித்தானியாவின் தடை குறித்து ஆளும்தரப்பின் நிலைப்பாடு மற்றும் அறிவிப்பு அதிருப்திக்குரியன. குறித்த தடையை வன்மையாகக் கண்டிப்பதாக குறிப்பிடும் தற்றுணிபு ஆளும்தரப்பிடம் இல்லை. அதன் நிலைப்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் - என்றார்.

## பிரிட்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டையே காட்டுகிறது. அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உள்நாட்டுப்போருக்குத் தலைமை தாங்கிய 3 தளபதிகளுக்கு பிரித்தானியா தடை விதித்திருப்பது பிரித்தானியாவின் இரட்டை நிலைப்பாட்டையே காட்டுகிறது. ஏனெனில் காசாவில் இஸ்ரேல் இராணுவம் அங்கு இனப்படுகொலைகளை மேற்கொள்ள அமெரிக்கா உதவி வருகின்றபோது, அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல், பிரித்தானியா பல வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற போருக்குத் தலைமை தாக்கியமைக்காக எமது படையினருக்குத் தடை விதித்திருக்கிறது.

அதேநேரம் பிரித்தானியா இவ்வாறு எமது படையினருக்குத் தடை விதித்திருப்பது தொடர்பில் ஆளும்தரப்பு இதுவரை தனது நிலைப்பாட்டை அறிவிக்காமல் இருக்கிறது. அதனால் ஆளும்தரப்பு இது தொடர்பில் தனது நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும். அத்துடன் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என பிரேரணை கொண்டுவந்தபோது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அதற்கு இடமளிக்காமல், உள்ளகபொறிமுறையொன்றை ஏற்படுத்துவதாகத் தெரிவித்திருந்தனர்.

அந்தப் பிரேரணை தற்போதும் செல்லுபடியானதாக இருக்கிறது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் அந்த முயற்சியிலேயே இருந்து வருகின்றன.

அத்துடன் காசாவில் இஸ்ரேல் இராணுவம் சிறுவர்கள், பெண்களை கொலைசெய்து அங்கு இனப்படுகொலை செய்து வருகிறது. அதற்கு பிரித்தானியா ஆதரவளித்து வரும் நிலையில் 15 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற போரை அடிப்படையாகக்கொண்டு தடைவிப்பதாக இருந்தால், அது பிரித்தானியாவின் சர்வதேசம் தொடர்பான இரட்டை நிலைப்பாடாகும். அதனை நாங்கள் கண்டிக்கிறோம். இந்தத் தடை மூலம் எமது நாட்டில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் போர்க் குற்றம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என செய்தியே வழங்கப்பட்டிருக்கின்றது. என்றாலும் எமது நாட்டின் உள்ளவிடயங்களில் சர்வதேச சக்திகள் தலையிடுவதற்கு நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

அதனால் எமது நாட்டின் கௌரவத்தை இந்த ஆளும்தரப்பு மதிப்பதாக இருந்தால், பிரித்தானியாவின் இந்த தடை விதிப்பை ஆளும்தரப்புக் கண்டிப்பதுடன், இது தொடர்பில் தனது நிலைப்பாட்டையும் தெரிவிக்கவேண்டும் என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவித்ததாவது:

பிரித்தானிய ஆளும்தரப்பு தமிழ் இனவாதிகளின் வாக்குகளை இலக்காகக் கொண்டு இலங்கையின் பாதுகாப்பு பிரதானிகள் (முன்னாள்) மூவருக்கு எதிராக தடைவிதித்துள்ளது. இந்த அறிவிப்பு வெளியாகி காலதாமதமான நிலையில்தான் அயலுறவுத்துறை அமைச்சு மறுப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய அரசு ஒருதலைப்பட்சமான தீர்மானத்தை எடுத்துள்ளதாக இலங்கை ஆளும்தரப்புக் குறிப்பிடுகிறது. இதனைப் புதிதாகக் குறிப்பிடவேண்டிய தேவையில்லை. ஏனெனில் இலங்கை ஆளும்தரப்பின் இணக்கப்பாட்டுடன்கூட்டு அறிவிப்பை விடுப்பதாக பிரித்தானிய ஆளும்தரப்புக் குறிப்பிடவில்லை.

பிரித்தானியாவின் இந்த ஒருதலைப்பட்சமான தீர்மானத்தால் இலங்கையின் நல்லிணக்கத்துக்கும், அதன் வகிபாகத்துக்கும் பாதிப்பு ஏற்படும் என்று அயலுறவுத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளமை உண்மையானது. இலங்கை இராணுவத்துக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் தடைகள் விதிக்கப்படும்போது ஆளும்தரப்பு கடுமையான முறையில் எதிர்ப்பினை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்த்தோம்.

முப்படைகளின் தளபதியான நிறைவேற்றுத்துறை அதிகாரமிக்க ஜனாதிபதியின் கட்டளையின் பிரகாரம் நாட்டுக்காகவே இராணுவத்தினர் போர்க் களத்துக்குச் சென்றார்கள். எவரும் தமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்காக செல்லவில்லை. ஆகவே இராணுவத்தினரை என்றும் பாதுகாக்கும் கடப்பாடு இலங்கை அரசுக்கு உண்டு.

இவ்விடயத்தில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்னவென்பது எமக்கும், உலகத்துக்கும் அவசியமற்றது. இலங்கை அரசு எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதையே முழு உலகும் எதிர்பார்த்துள்ளது.

பிரித்தானியா விதித்துள்ள தடையில் முன்னாள் இராணுவத் தளபதி இருவர் மற்றும் கடற்படைத் தளபதி ஒருவர் மீது பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இது மிகவும் பாரதூரமானதுடன், நாட்டின் கௌரவத்துக்கும் களங்கம் ஏற்படுத்தும்.

தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகவே இந்தத் தடையினை விதித்துள்ளதாக பிரித்தானியா அரசு குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாகவே தமிழ் பிரிவினைவாதிகளின் அழுத்தம் என்று குறிப்பிடுகிறோம். பிரித்தானியாவில் பலம் உள்ள தமிழ் பிரிவினைவாதிகள்தான் ஆளும்தரப்பைத் தீர்மானிக்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளிலும் இந்நிலைமையே காணப்படுகிறது.

மனித உரிமைகள் வெளிப்படையான முறையில் மீறும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கிறது. யூதர்களின் ஆதரவு அமெரிக்காவுக்கு அவசியமானது. இதுபோலதான் தமிழ் பிரிவினைவாதிகளின் கட்டளைகளுக்கு பிரித்தானியா இன்று அடிபணிந்துள்ளது. தொழில் கட்சி ஆட்சிக்கு வரும்போது இந்தப் போக்கு அதிகரிப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழ் பிரிவினைவாத கொள்கையுடைய கனேடிய தமிழ் கார்டியன் அமைப்புக்கு ஆளும்தரப்பு இந்த வழங்கிய வாக்குறுதிகள் என்னவென்பதை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்துமாறு பலமுறை வலியுறுத்தினோம். இதுவரையில் உண்மை பகிரங்கப்படுத்தப்படவில்லை - என்றார்.

## மிலேனியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பான இல்லம் பற்றிய தகவல்களைப் பகிரங்கப்படுத்தியதன் மூலம் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவித்தார் எனக் கூறி, கண்டி முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கொழும்பு மேல் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

சுமார் இருபது வருடங்களாக நீடித்த நீண்ட விசாரணைக்குப் பிறகு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யா பட்டபெந்திகே இந்தத் தீர்ப்பை அறிவித்தார்.

2022 ஆம் ஆண்டு ஜனவரி 2 அன்று அத்துருகிரியவில் உள்ள 'மிலேனியம் சிட்டி' வீட்டு திட்டத்தில் பராமரிக்கப்பட்டு வந்த இலங்கைப் படையினரின் புலனாய்வுப் பிரிவுக்குச் சொந்தமான ஒரு பாதுகாப்பு இல்லத்தைச் சோதனையிட்டு, இராணுவ புலனாய்வு அதிகாரிகள் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பகிரங்கப்படுத்தியதன் மூலம், நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பை பாதிக்கும் வகையில் செயல்பட்டதன் ஊடாக அதிகாரப்பூர்வ இரகசியச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டிய, கண்டி முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொலவுக்கு எதிராக சட்டமா அதிபர் இந்தக் குற்றப்பத்திரிகியை தாக்கல் செய்திருந்தார்.



## கிழக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்

கிழக்கு தமிழர் கூட்டணியின் கல்குடா தொகுதிக்கான வேட்பாளர் அறிமுக விழா கிரான் றெஜி மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தலைஒருமுக்கியமான தேர்தலாகவே பார்க்கின்றோம். முக்கியமாக முதல் முறையாக ஓர் அணியாகத் திரண்டு ஒரு கூட்டாகக் களமிறங்கியுள்ளோம். ஆகவே ஒவ்வொரு வேட்பாளரும் வெல்லவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படவேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும்

தற்போது கிழக்குத் தமிழ்க் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பிற்பாடு இதனைப் பெறுத்துக்கொள்ள முடியாத பலர் கலக்கமடைந்துள்ளதுடன் இவ்வளவுகாலமும் இல்லாத எதிர்ப்பு உருவாகி கொதித்துக் கொள்கின்றனர்.

புலம்பெயர்ந்து வாழுகின்ற படித்தவர்கள் புத்திஜீவிகள் வர்த்தகர்கள் சிந்திப்பதில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பை முதலில் தோற்கடிக்கவேண்டும். அவர்கள் போலித் தேசியத்தை பேசிக் கொண்டு மக்களை ஏமாற்றி இலஞ்சம் ஊழல் எல்லாவற்றையும் செய்கின்றனர். உண்மையில் போராளிகளாக இருந்தவர்கள் மாவீரர் குடும்பங்களாக இருந்து வந்தவர்கள்தான் எங்கள் மக்களை ஆளவேண்டும் அவர்களுக்குத்தான் இந்த உரிமையும் மக்களை நடத்தும் திறமையும் இருக்கின்றது.

நாங்கள் கூட்டமைப்பை உருவாக்கியது உலகம் முழுக்க பேசும் பொருளாகப் பார்க்கப்படுகின்றது. அண்மையில் பிரித்தானியா அரசு கருணாவாகிய எனக்கு தடைவிதித்தது. நாங்கள் என்ன பிச்சை எடுக்கப்போறோமா? இவ்வளவு நாளும் இல்லாத தடை எதற்காக இப்போது விதிக்கின்றனர்? இதுஓர்அரசியல்நாடகம்தான்.

பிரித்தானிய அரசால் நான் 2006 கைது செய்யப்பட்டு அங்கு சிறைச்சாலையில் 8 மாதங்கள் இருந்தேன். அப்போது இல்லாத குற்றைச்சாட்டு இப்போதுதான் பிரித்தானிய அரசுக்குத் தெரியவந்ததா. அந்தநேரம் கண்டுபிடித்து கையில் விலங்கைபோட்டு கொண்டு சென்றிருக்கலாம். ஆனால் அரச மரியாதையடன் கட்டுநாயக்க விமான நிலையம் வரை என்னை பாதுகாப்புடன் கொண்டு வந்தார்கள். அப்படிபட்ட பிரித்தானிய அரசுக்கு இப்பதான் கருணா அம்மான் பிழை விட்டுள்ளார் என்று தெரிகிறது. ஆகவே இதுவெல்லாம் கிழக்கு தமிழர்களுடைய இருப்பை சூறையாடுவதற்கான நடவடிக்கையாகும்

காய்கின்ற மரத்துக்கு கல்லொறி விழும் என்ற பழமொழிக்கமைய வெற்றிக் குறி தென்படுகின்ற எம்மீதுதான் இலக்கு வைக்கப்படுகின்றது. கிழக்கு மாகாண சபையை நாங்கள் கைப்பற்றுவோம். கிழக்கு மாகாண சபையைத் தவற விடுவோமாக இருந்தால் முஸ்லி ம் தலைவர்களுடைய ஆதிக்கம் வளர்ச்சியடைந்து தமிழர்களுடைய நிலப் பிரதேசங்கள் குட்டிச்சுவராக்கி இருப்பே கேள்விக்குறியாகும் என்றார்.

## குதர்க்கம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான இராமநாதன் அருச்சுனா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், தென்மராட்சி பிரதேச செயலாளர், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வீதி அபிவிருத்தி, சுகாதாரம், விவசாயம், மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

விடயங்கள் தொடர்பில் ஆராயும்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அருச்சுனாவுக்கும் இளங்குமரனுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

"ஐந்தாயிரத்திற்கு 3 பூச்சியங்கள்" எனக் குதர்க்கம் பேசினார் அருச்சுனா. அதற்குக் கூட்டத் தலைவரான இளங்குமரனும் பதில் வழங்கிக் கொண்டிருந்தார். இவர்களின் குதர்க்கத்தைப் பார்த்து ஆத்திரமடைந்த மக்கள், நாங்கள் வேலை வெட்டி இல்லாமல் இந்த இடத்திற்கு வரவில்லை. எங்களுடைய நேரத்தினைவீண்விரயம்செய்யாதுபயனுள்ள வகையில் இந்தக் கூட்டத்தினை நடத்துங்கள்" எனச் சீறிச் சினந்தனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூ-ட்டத்திலும் இந்த இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களின் சொந்த வாழ்க்கை, தொழில் என்பவற்றை இழிவாகக் கூறி குதர்க்கம் பேசிக்கொண்டிருந்தனர். கூட்டத்தின் தலைவரான அமைச்சர் சந்திரசேகரானால் இருவரையும் கட்டுப்படுத்த முடியாதநிலையில்கூட்டம்இடைநிறுத்தப்பட்டது.

கடந்த நல்லூர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும்நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் நையாண்டிகள் அதிகரித்த நிலையில் பொதுமக்கள் தங்கள் எதிர்ப்பினை வெளிக்காட்டத் தொடங்கியிருந்தனர். அதையடுத்து தென்மராட்சியில் அவர்கள் இருவருக்கும் மக்கள் சூடு வைத்துள்ளனர்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



உ
முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## மாவிலை தோரணம் கட்டுதல்.

சைவத் தமிழ் மக்கள் வாழ்வியலுடன் உயர்ந்த அறிவியல் சார்ந்த நடைமுறைகள் பல தொன்று தொட்டு இணைந்து வாழ்வித்து வருகின்றது.அவற்றின் காரண காரியங்களில் தெளிவான விளக்கமின்மை காரணமாக சிலபோது அவற்றை பிற் போக்கானவை எனச் சிலர், புறந்தள்ளி மறந்து வருவது கவலைக் குரியது.

சமூக மரபுரிமை பேணி எம்மிடத்தே சில உயரிய நடைமுறைகளைமுன்னோர்கையளித்துள்ளார்கள்.அவற்றில் சிறப்பான,மனித சமூகத்துக்கு நன்மைதரும்பல அறிவியல் உட்பொருட்கள் பொதிந்துள்ளன.

அவைஒவ்வொன்றையும்ஆழமாகச்சிந்திக்கவேண்டும்.

அவற்றில் விளக்கமின்மை என்பதற்காக,அவற்றை உதாசீனம் செய்து வாழக் கூடாது.தெரியாதவற்றை தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

‘தேடல்’ என்பது மனிதனுடைய அறிவுசார் விருத்திக்குப் பெரிதும் உதவ வல்லது என்பதைத் தெளிந்து கொள்வோம். அறிஞர் பெரியோர்களிடம் கேட்டறிந்து கொள்ளலாம். நூல்கள்,இணையங்களில்வாசித்து அறிந்துகொள்ளலாம்.

சைவப் பெரியோர்கள் சிலர் ஊடகங்களையும் இணையங்களையும் தவறாக தமது நலனுக்காகப் பயன் படுத்துவதை அண்மைக்காலமாக அவதானிக்க முடிகின்றது.இது கவலைக்குரியதே.தவறுகள் திருத்தப் படவேண்டும்.

தமது நேரத்தை பெறுமதியான கருத்துக்களைப். பகிர்வதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தினால், அது மனித குல விருத்திக்குப் பேருதவியாக அமையும்.எமது சமூகத்தின் இருப்புக்கும் அது துணை நிற்கும்,

இந்த அரிய பணியினை’நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலை கூடலினர்’ ‘காலைக்கதிர்’ பத்திரிகையில் ‘செவ்வழி நயனம்’ என்ற சைவ மணம் கமழும் பந்தி மூலம் கடந்த சில வருடங்களாக முன்னெடுத்து வருவது மகிழ்ச்சி தருகின்றது.கூடலினருக்கும், காலைக்கதிர் பத்திரிக்கை நிறுவனத்தினருக்கும் சைவத் தமிழ் மக்கள் சார்பில் எமது உளமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

இந்தவரிசையில்அவர்கள்சிந்தனைக்கும்செயலுக்கும் உரம் சேர்க்குமுகமாக இன்று சைவத் தமிழ் மக்கள் தமது வாழ்வியலுடன் இணைத்துக் கொண்ட ‘மாவிலை தோரணம் கட்டல்’ தொடர்பான சில அறிவியற் பின்புலத்தை இங்கு சிந்திப்போம்.

சைவத் தமிழ் மக்களின் வாழ்வில் இடம்பெறும் மங்கல,அமங்கல காரியங்களுடனும் மற்றும் ஆத்மீக, தெய்வீக நிகழ்வுகளுடனும் ‘மாவிலை தோரணம் கட்டுதல்’ முக்கியம் பெற்றுள்ளது..

அவை வெறும் அலங்காரத்துக்காக கட்டப்படுபவை அல்ல.அங்கே எமது பண்பாடு பேணப்பட்டு அதன்வழி சமூக நலன் உள்வாங்கப் பட்டுள்ளதுடன் அறிவியல் சிந்தனைகளும் செறிந்துள்ளன.

தென்னோலைத் தோரணம் கட்டுதல் சைவத் தமிழரின் விழுமிய செயற்பாடுகளில் முக்கிய அடையாளச் சின்னமாகும்.தென்னை மரத்தின் குருத்தோலையில் அந்தத் தோரணத்தை உருவாக்கிக் கொள்வார்கள். அந்தக் குருத்தோலை வெள்ளை நிறமானது. வெள்ளை நிறம் தூய்மையையும் புனிதத்தையும் அடையாளப் படுத்தி நிற்கும்.தென்னை மரம் காலங்களைக் கடந்து ஓங்கி உயர்ந்து செழித்து வளர்ந்து எல்லோரையும் குளிர்விக்கும் இயல்பு கொண்டது. அதன் பகுதி ஒன்றை அங்கு அடையாள படுத்தி மக்கள் வாழ்வும் அவ்வ்வாறு செழித்து உயர வேண்டுமென வாழ்த்திக் கொள்கின்றார்கள்.

தென்னோலையில் அமைத்த தோரணத்தினை சைவத் தமிழர் தமது மங்கல அமங்கல காரியங்கள் இரண்டிலும் தவறாது பயன் படுத்துவர். ஆனால் அவற்றை அமைக்கும் முறையில் வேறுபாட்டினைக் காணக் கூடியதாக இருக்கும்.

அதன் வழி மங்கலத் தோரணம் அமங்கலத் தோரணம் என அவை அடையாளப் படுத்தப் படுகின்றது. சமய விழாக்கள்,திருமணம் போன்றவற்றிற்கு மங்கலத் தோரணம்பயன்படும். அதற்கு தென்னையின் தனிக்



குருத்தோலையின் வால்பகுதி மேலே இருக்க அடிபகுதியில், மேலிருந்து கீழாக வெட்டி மடித்து தோரணத்தை உருவாக்கிக் கொள்வர். அதன்போது அங்கே குருவி போன்றதொரு வடிவம் தோற்றம் பெறும். அந்தக் குருவியின் தலை மேல் நோக்கியும் வால் கீழ் நோக்கியும் இருக்கும். அவ்வாறு ஒரு ஓலையில் நான்கு அல்லது ஐந்து குருவிகளை உருவாக்கி தேவையான தோரணங்களை ஒவ்வொன்றாக செய்துகொள்வர்.இங்கு ஐந்து ஓலைகளைக் கட்டி மேற்சொன்ன முறையில் ஒவ்வொன்றாக மேலிருந்து கீழாக வெட்டி பின்னர் குருவிகள் தோன்றக் கூடியதாக மடித்து ‘கொத்துத் தோரணம்’ மங்கல நிகழ்வுகளுக்குப் பயன் படுத்தப் படுவதுண்டு.

மரண வீடு போன்ற அமங்கல நிகழ்வுகளுக்கு பயன் படும் தென்னோலைத் தோரணம் மேற்சொன்ன செய்கை முறைக்கு நேரெதிராக அமைக்கப் படும். இங்கே ஓலையில் கீழிருந்து மேலாக வெட்டி மடித்து குருவித் தோற்றத்தைப் பெற்றுக் கொள்வர்.அதன்போது குருவியின் தலை கீழ் நோக்கியும், வால் மேல் நோக்கியும் அமையும். அங்கு மூன்று குருவிகளே இடம் பெறல் வேண்டும்.

இந்த இரண்டுவகைத் தோரணங்களில் சமய விழாக்கள் மற்றும் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு கட்டப் படும் தென்னோலைத் தோரணத்துடன் மட்டும் இடையிடையே மாவிலைகளைத்தொங்கவிடுவதும்,தனித்துமாவிலைகளால் தோரணம் அமைப்பதும் உண்டு.

மாவிலைகள் கட்டுவதில் பெறுமதியான அறிவியல் பின்னணிகள் பிணைந்து உள்ளன.அவற்றை இனி நோக்குவோம்.

### மாவிலையும் அறிவியலும்.



சைவத் தமிழர்கள் தமது வீடுகளில் வீட்டு முகப்பு நிலைகளிலும், உள்ளே சுவாமி அறை நிலைகளிலும் மாவிலைகளைத் தொங்கவிடுவார். இதுவும் வெறும் அலங்காரத்துக்காகவோஅல்லதுபழமைபேணுவதற்காகவோ அல்ல.

மாறாகஅங்கேகுடும்பநலனும்சமூகநலனும்பேணப்படும் அறிவியல் உண்மைகள் பல பொதிந்துள்ளன. மாவிலை மனிதர்கள் வெளிவிடும் கரியமலவாயுவை உள்வாங்கி பிராண வாயுவை வெளிவிடும் இயல்பு கொண்டது.

ஏனைய தாவரங்களும் இவ்வாறான இயல்பு கொண்டவைதானே?ஏன் மாவிலையைத் தொங்க விடவேண்டும் என்று சிலர் ஐயுறலாம்.

ஆம் அதற்கு பல அறிவியல் சான்றுகளுள்ளன. படித்துப் பட்டம் பெறாத நிலையிலும் மேதைகளான எமது முன்னோர் அனுபவ வாயிலாக அவற்றை நன்கு அறிந்து பயன்படுத்தியதுடன், அவற்றை தமது சந்ததியினரும் பயன் படுத்தி நன்மைபெற எமக்காய் விட்டுச் சென்றிருக்கின்றார்கள் என்பதை மறவற்க.

மாவிலையில் இலைத்துளை என அழைக்கப்படும் இலை வாய்களின் அடர்த்தி அதிகமாக உள்ளது.இதன் காரணமாக அவற்றால் விரைந்து வாயுப்பரிமாற்றத்தைச் செய்து கொள்ள முடியும்.அதனை மேலும் விளக்கமாகக் கூறின்மாவிலைகளின்மேற்பகுதியில்வெற்றுக்கண்களால் காண முடியாத அதிகளவு சிறு துளைகள் உள்ளன.அவை எப்பொழுதும்வாயுப்பரிமாற்றம்செய்யும்இயல்பின.அதனால் மாவிலையால் ஏனைய தாவரங்களைவிட அதிகளவு கரியமலவாயுவை உள்ளெடுத்து பிராணவாயுவை வெளியிடமுடியும்.இந்த அறிவியல் உண்மையை அறிந்த எம்முன்னோர் மாவிலைப் பயன்பாட்டை ஊக்குவித்து எமக்களித்தனர்.

மாவிலை மரத்தில் இருந்து பறித்தாலும் பல மணி நேரங்களுக்கு பிராண வாயுவை வெளியிட்ட வண்ணம் இருக்கும்.மற்றும் மாவிலையில் நீர் நீங்கு தன்மை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.அதிக நேரம் அது நீர்த் தன்மையை தன்னகத்தே கொண்டிருக்கும்.

அத்துடன் மாவிலை ஒரு கிருமி நாசினி.வாஸ்த்துக் குறைபாட்டினையும் அது நீக்கி எம்மைச் சூழவுள்ள வளியினைச் சுத்தப்படுத்தி உதவும்.இவை காரணமாக மாவிலைப் பயன்பாடு முக்கியம் பெறுகின்றது..

அதனாலேதான் வீடுகளிலும் மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் மாவிலைப் பயன்பாடு அறிமுகமாகி நடைமுறையில்உள்ளது. வீடுகளிலே மின்காந்த அலைகள் இருந்து கொண்டே இருக்கும்.இவை நல்லனவற்றையும் தீயனவற்றையும் வீட்டுள் ஈர்க்கும் இயல்பின.இதற்கு தடை போட முடியாது. போட்டால், வீட்டிற்கு நன்மைதரும் விசயங்களும் தடைப்பட நேரிடலாம். இதனால் வீட்டிற்குள்ளும் வெளியிலும் இருக்கும் தீய சக்திகளை நீக்கி நல்ல சக்திகளைத் தக்க வைக்கும் வடிகட்டியாக மாவிலை பயன்படுகின்றது.

மற்றும் நாம் வெளியில் சென்று வீட்டுக்குத் திரும்பும் போது எம்முடன் சேர்ந்து கொள்ளும் எதிர்மறைச் சக்திகளையும் ஈர்த்து சுபீட்சம் தர வல்லது மாவிலை என்பதும் நம் முன்னோரின் அரிய கண்டுபிடிப்பு ஆகும்.

ஒரு வீட்டின் உயிர் சக்தியாக விளங்குவது நிலை வாசல் ஆகும். அதனாலேதான் நிலை வாசலில் மாவிலைகளைக் கட்டிப் பாதுகாத்துக் கொள்கின்றார்கள்.அங்கு கட்டப்படும் மாவிலைகளின் எண்ணிக்கையினை ஒன்பது அல்லது இருபத்தியேழு என்றும் கணித்திருந்தனர்.

மா இலை என்பது மகா சக்தி பொருந்திய இலை என்பதைக் குறித்துக் கொள்ளவும் அவ்வாறு கூறப்பட்டதாகவும் பிற்காலத்தில் அது மாவிலையாக மாற்றம் பெற்றதாகவும் விளக்குவர். அந்த வகையில் மாவிலைக்கு சக்தி அதிகமாகவுள்ளது.அது தெய்வீக சக்திகளை ஈர்த்து வைத்திருக்கக் கூடியது. உச்சாடனம் செய்யப்படும் மந்திரங்களை இசைக்கப்படும் தேவார புராணங்களை உள்வாங்கி வைத்திருக்கக் கூடிய சக்தியும் மாவிலைக்கு உண்டு.அதனாலேதான் கும்பங்கள் வைக்கும்போது கலசங்களில் மாவிலை சேர்க்கப் படுகின்றது. அத்துடன் தோஷங்கள் நீங்க கலசத்தில் உள்ள நீரைத் தெளிப்பதற்கும் மாவிலையே பயன்படுத்தப் படுகின்றது.

மற்றும் மாவிலைப் பயன்பாட்டில்,மேற்கூறியவற்றுடன் மாபெரும் வாழ்க்கைத் தத்துவமும் அடங்கியுள்ளது. அதாவது மாவிலையில் என்றும் அழுகிக் கெடும் தன்மை இல்லை.காய்ந்து உலர்ந்து போகலாம். அதே போல் வாழ்க்கையும் கெட்டுவிடாது அமைய வேண்டும் என்பதையும் அது உணர்த்தி நிற்கின்றது.

மாவிலைகொண்டு மகிழ்வான வாழ்வு காண்போம்.

அபிராமி
அவுஸ்திரேலியா

காலைக்கதிர் Kalaikkathir

# கலைஞராய் அறிஞராய் துறவியாய் மிளிர்ந்த அடிகளார்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ......ஆஸ்திரேலியா

உலகிலை பிறக்கின்ற மனிதரெலாம் உயர்வு நிலையினை அடைந்து விடுவதுமில்லை. இலட்சியம் பற்றிச் சிந்திக்கும் நிலை பலரிடம் காணப்படுவதும் இல்லை. பிறந்தோம் வாழுகிறோம் என்னும் பாங்கில் இருப்பவர்கள் தான் பல பேர்களாக இருக்கிறார்கள். வாழும் காலத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள இயலாமல் பிரச்சினைகள் வழியில் சென்று அதனுடன் ஒத்துப்போய் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அதேவேளை நமக்கு ஏன் இந்தப் போராட்டம். வருகின்ற பிரச்சினைகளை புறந்தள்ளி விட்டு விட்டு தானாக ஒதுங்கி நமக்கேன் இந்தச் சிக்கல் ? ஒதுங்குவதுதான் மேலென எண்ணி இருப்பவர்களும் இருக்கிறார்கள். என்னதான் பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு அவற்றுக்குத் தீர்வு கண்டு அந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வினைக் காணும் முயற்சியில் ஈடுபட்டு முற்போக்காளர்களாக சமூகச் சிந்தனையாளர்களாக இருப்பவர்களும் இருக்கிறார்கள்.

மூன்றுவகையான சிந்தனை செயற்பாடு மிக்கவர்கள் சமூகத்தில் காணப்ப டும் வேளை இவர்களில் எந்த வகையினரை சமூகம் நினைத்துபார்க்கும் என எண்ணுகின்ற பொழுதுதான் மனிதவாழ்வின் அர்த்தம் தெரியவரும். பிரச்சினைகளுடன் ஒத்துப்போய் கையாலாகாத நிலையில் இருப்போரையோ அல்லது பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் நமக்கேன் என்று புறந்தள்ளி ஒதுங்கிப் போகின்றவர்களையோ யாரும் எக்காலத்தும் நினைத்துப் பார்க்கவே மாட்டார்கள். சமூகத்தின் பிரச்சினைகளை எதிர்கொண்டு அவற்றுக்கு உகந்த தீர்வுகளைக் கண்டறிந்து அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு சமூக உணர்வினை உள்ளத்துள் இருத்திக் கொண்டு வாழ்ந்தவர்கள்தான் எல்லோராலும் எக்காலத்தும் நினைவு கூரும் நிலை க்கு நிற்பார்கள் என்பது மிகவும் முக்கிய கருத்தெனலாம். இந்த வகையில் பார்க்கும்வேளை ஈழத்தின் கிழ க்கில் காரைதீவில் தோன்றிய சுவாமி விபுலானந்த அடிகளார் வந்துநிற்கிறார் எனலாம்.

விபுலானந்த அடிகளார் அவர்கள் இப்பூவுலகில் வாழ்ந்த காலம் ஐம்பத்து ஐந்து வருடங்கள் மட்டுமே யாகும். ஆனால் இக்கால கட்டத்துக்குள் அவரின் வாழ்வானது மூன்றுவித அனுபவங்களைக் கொண்ட தாக அமைகிறது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். ஈழத்தில் பிறந்த அடிகளார் இந்தியாவில் இருக்கும் நிலை ஏற்படுகிறது. அதுவும் தமிழ் நாடாகிய தென்னிந் தியாவிலும் தமிழ்பேசாத வட இந்தியாவிலும் இருக்கின்ற சூழலும் அடிகளாருக்கு ஏற்படுகிறது. இதனால் மூன்று விதமான சூழலும் அங்கு கிடைத்த அனுபவங்களும் அடிகளாரின் பணிகளில் சிந்தனைகளில் செயற்பாடுகளிலெல்லாம் பல தாக்கங்களுக்குக் காலாகவும் இருந்திருக்கும் என்பதும் கருத்திருத்த வேண்டியதே.

பிரித்தானியர் ஆட்சியில் இந்தியா சிக்கித்தவித்த காலம் . வட இந்தியாவில் ஒரு போக்கும் தமிழ்நாட்டில் இன்னொரு போக்கும் சமூகத்தில் எழுந்து நின்ற காலம். சாதிப்பிரிவினை வடக்கில் காந்திய இயக்கத் தால் எதிர்கப்பட்டது. தீண்டாமை என்பது இருந்தால் தேசிய உணர்வு ஏற்படுதல் தடையாகும் என்பதால் காந்தி அவர்கள் தீண்டாமைக்கு எதிர்க்குரல் கொடுத்தார். தமிழ் நாட்டில் பிராமணர் ஆதிக்கம் யாவற்றிலும் முன்னின்றதால் அதனை உடைக்க திராவிட இயக்கம் தலைதூக்கி தமிழியக்கத்தை முதன்மைப் படுத்தி தனித் தமிழ் வாதத்தை ஓங்கி ஒலித்த சூழல் அங்கு காணப்பட்டது. இலங்கையிலோ சமய மாற் றம், இனவாதம் , சாதிப்பிரச்சினை, என்பவற்றோடு தமிழ்ப்பகுதிகளில் மரபுவழி தமிழ் இலக்கியங்கியங் களைப் பேணுவதும், சைவத்தைக் காப்பதுவுமான ஒரு சூழல் காணப்பட்டது எனலாம்.

இப்படியான சூழலில் சுவாமி அவர்கள் வாழும் நிலை ஏற்பட்டதால் அவரின் நடவடிக்கைகளிலும் இம்மூன்று சூழல்களும் பாதிப்பினை உண்டாக்கத் தவறவில்லை என்றே அறிஞர்கள் கருதுகிறார்கள். தாய்மொழியுடன் ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம், பாளி , லத்தீன், கிரோக்கம், அரபி, என்று பன்மொழி அறிவினையும் சுவாமி அவர்கள் பெற்றிருக்கிறார்கள். பன்மொழி அறிவால் அவரின் பார்வை குறுகிய வட்டத்துக்குள் அடங்கிவிடவில்லை. அவரின் எண்ண ஓட்டங்கள் பரந்துபட்டனவாகவே அமைந்திருந்தது.

மரபுவழியில் தமிழினைக் கற்று தமிழில் பண்டிதர் பட்டமும்பெற்றவராக இருந்தபொழுதும் அவரின் விஞ்ஞானப் பட்டப்படிப்பு அவரை பழமைக்குள் மட்டும் அமுங்கிவிடச் செய்துவிடவில்லை என்பதுமிகவும் முக்கிய கருத்தெனலாம். பண்பாட்டினைக் கட்டிக்காத்து சமயநெறிகளைக் கடைப்



பிடித்து ஒழுக் கத்தை உள்ளிருத்தி வாழ்ந்தாலும் அவரின் சிந்தனைகள் செயற் பாடுகள் சமூகத்தின் புரையோடிப் போன புறம்போக்கான நடவடிக்கைகளை மட்டும் ஏற்றுவிடும் மனப்பாங்கு அவரிடம் காணப்படவில்லை என்பதும் மனம் இருத்தவேண்டியதே.

சைவசமயச் சூழலில் சைவராக வாழ்ந்த சுவாமிகள் ஆரம்பத்தில் சித்தாந்தத்தை பெரிதென எண்ணு கிறார். பின்னர் அவரின் போக்கு இராம கிருஷ்ண மடத்துடன் இணைந்துவிடும் நிலையில் வேதாந்தமே முன்னுரிமை வகிக்கும் நிலை உருவாகிறது. இராமகிருஷ்ண அமைப்பில் சேருமுன் சுவாமிகளின் சிந் தனை எழுத்து செயற்பாடுகள் வேறு. இராமகிருஷ்ண அமைப்பில் இணைந்தபின்னர் அவரின் எழுத்து க்கள், நடவடிக்கைகள், சமூகப் பார்வைகள் வேறாகவே இருந்தன என்பதை அவரின் வரலாற்றில் கண்டு கொள்ள முடிகிறது. சமரச சன்மார்க்க நெறி என்பதே அவரின் மனத்தை நிறைத்து நின்றது எனலாம்.

மொழிபெயர்புகள் செய்தார். மரபுக்கவிதைகள் யாத்தார். பலவிதமான கட்டுரைகளை எழுதினார். பத்தி ரிகை ஆசிரியராக விளங்கினார். ஆராய்ச்சி நூல்களை எழுதினார். இசைபற்றி ஆராய்ந்தார். அவரின் அரிய முயற்சியால் பழந்தமிழ் இசையின் பரிணாமம் என ' யாழ் நூல் ' எழுந்து வந்தது. இந்த நூலின் வருகை பலரையும் பிரமிக்க வைத்தது. பழங்கால இசை மரபை தனது இசை அறிவாலும், கணித அறிவாலும், தமிழ் அறிவாலுமே யாழ்நூலாக அடிகளார் அவர்கள் ஆக்கி அளித்தார் என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

அறிஞர்கள் யாவரும் போற்றும் வண்ணம் இப்படைப்பு வந்திருக்கிறது என்றால் அந்த அளவு ஆளுமை யினை அடிகளாரின் கல்விப்புலமே வழங்கி இருக்கிறது எனலாம். யாழ்நூலினை ஆராய்கின்ற பொழுது தமழிசையினை கணித மொழியினில் விளக்க முயன்ற திறனையே காட்டுகிறது எனலாம்.

பன்மொழி அறிவால் பன்னாட்டு நூல்களையும் அங்குள்ள பண்பாடு கலாசாரங்களையும் மூல மொழி யிலே கற்று விளங்கும் ஆற்றலை அடிகளார் பெற்றவர் ஆகிறார். மரபுவழிவந்த தமிழ் அறிஞர்களிடம் கல்வி கற்றாலும் கூட அடிகளாரின் எண்ணங்கள் விசாலம் அடைவதற்கு பன்மொழி ஆற்றல் கைகொடு த்த காரணத்தால் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டுவதை அடிகளார் புறந்தள்ளுகிறார். அக்கால தமிழ் அறிஞர்களிடம் காணப்பட்ட அத்தனை அறிவும் ஆற்றலும் அடிகளாரிடமும் காணப்பட்ட போதிலும் – அவர் அத்தகைய பழைமபேணும் அறிஞர்கள் வரிசையில் தாமும் இடம்பெற்று நின்று விட விரும்ப வில்லை. அவரின் கலை ,இலக்கியம், சமூகம் பற்றிய பார்வையானது உலகின் பரந்துபட்ட சிந்தனை களுடன் தமிழினையும் உற்று நோக்குவதாகவே அமைந்திருந்தது என்பதுதான் கவனத்தில் இருத்த வேண்டிய கருத்தெனலாம்.

அகில உலகப்பார்வையினால் அடிகளின் சமூக நோக்கும் அதன் அடிப்படையிலே எழுச்சி பெற்றது என லாம். உயர்வு தாழ்வு பார்ப்பதை அவரது உள்ளம் ஏற்றிட மறுத்தது. இதனால் சாதிபற்றிய எண்ணமே அவரின் மனத்தில் இருந்திட மறுத்தே விட்டது எனலாம். செயல்களினால் மனிதர்கள் வேறுபடலாமே ஒழிய பிறப்பினால் அல்ல என்னும் சிந்தனை அடிகளாரின் மனதில் வேரூன்றி நின்றது என்பதை அவரின் நடவடிக்கைகள் மூலம் அறிந்திட முடிகிறது என்று அவரின் வரலாறு புலப்படுத்தி நிற்கிறது எனலாம்.

விஞ்ஞானம் படித்தவர் மெஞ்ஞானி ஆகிறார். இராமகிருஷ்ண அமைப்பு அடிகளிடம் பல மாற்றங்க ளுக்கு வழி சமைக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த பொழுது ஒதுக்கப்பட்ட வர்கள், கல்விகற்க வழியற்றவர்களை நாடிச்சென்று அவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்து அவர்களின் நலனில் அடிகளார் காட்டிய அக்கறை அவரின் சமூக சமத்துவ மனப்பாங்கினுக்கு மிக்கதோர் சான்று எனலாம்.

பாரதியாரை பெரும்புலவர் என்றோ அவரின் கவிதைகளை தமிழ்க் கவிதைகள் என்றோ தமிழ்நாட்டில் இருந்த பழந்தமிழ் பண்டிதப் பரம்பரை ஏற்றுக் கொள்ளாத நிலையில் தமிழ்நாட்டில் பிறந்த பாரதியை சமூகத்தின் முன்னே கொண்டுவந்து காட்டி பாரதிக்கும் அவரது படைப்பினுக்கும் முன்னுருமையினை ஈழத்தவராக இருந்தும் சுவாமி விபுலானந்தர் எடுத்துக் கொடுத்திருக்கிறார் என்றால் சுவாமிகளின் எதிர்கால நோக்கும் தீர்க தரிசனமும் பரந்துபட்ட பார்வையும் என்றுதானே கொள்ள முடிகிறது. இதற்குக் காரணம் சுவாமிகளின் பழமைக்கும் புதுமைக்குமான பொறுத்தப் பாடு எனலாம். புதுக்கவிதை எழுது பவர்கள் பாரதியைத் தொடுகிறார்கள் . வசன கவிதையைக் கையில் எடுப்பவர்கள் பாரதியைப் பார்க்கி றார்கள். மரபுக்கவிஞர்கள்கூட பாரதியின் கற்பனை ஆற்றலில் கட்டுண்டு போகிறார்கள். இந்த வகையில் பாரதிக்கு முன் பாரதிக்கிக்குப் பின் என்று சொல்லும் நிலையும் இன்று ஏற்பட்டிருக்கிறது. பாரதியின் பாடல்கள் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை படிப்பிக்கவும் படுகிறது. இப்படியெல்லாம் நடக் கவேண்டும் என்றும் அடிகளாரின் சிந்தனையில் அன்றே உதித்திருக்கிறது. இதைத்தான் ஆத்மீக பலம் என்கிறோம். ஆத்மீக பலம் மிக்க அடிகளார் எதைச் செய்தாலும் அவையாவுமே அன்றும் பயனை நல்கி யது.இன்றும் நல்கிக் கொண்டே இருக்கிறது என்றும் எடுத்துக் கொள்ள லாம் அல்லவா !

' தோன்றிற் புகழொடு தோன்றுக ' என்பது முற்றிலும் அடிகளாருக்கே மிகவும் பொருந்துவதாக அமைகிறது . ஈழத்தில் காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தவர் இமயமலைவரை சென்று இமாலய சாதனையின் நாயகனாக மிளிர்ந்தார் எனும் பொழுது கருவிலேயே திருவினைப் பெற்றே அடிகளார் பிறந்திருக்கிறார் என்பது வெள்ளிடை மலை எனலாம். சாதாரண விஞ்ஞான ஆசிரியராய் ஆரம்பித்து யாழ்ப்பாணம் சென்று அங்கு தனது வாழ்வினைத் திருப்பி விடுகிறார். அடிகளார். கல்வியால் திருப்பம். சிந்தனையால் திருப்பம். மயில்வாகன விஞ்ஞான ஆசிரியராக யாழ்ப்பாணம் சென்றவர் பாதை மெஞ் ஞான சிந்தனையில் சுவாமி விபுலானந்தர் ஆகிவிடு கிறார். பழமையில் ஊறியவர் பழைமையையும் புதுமையையும் சரிவர உணர்ந்து சரியான வழியினைத் தேர்ந்தெடுத்து சித்தாந்தத்தையும் வேதாந்த த்ததையும் சிந்தியில் இருத்தி சமூக ஈடேற்றத்துக்கு எது சிறந்தது என்பதை உள்ளத்து இருத்தி அதன் வழியில் செயலாற்றி சமூகத்தில் ஏற்றுதலுக்கும் போற்றுதலுக்கு உரியவராக உயர்ந்து நிற்கிறார்.



கல்வித்தொண்டு, சமூகத்தொண்டு, இலக்கியத்தொண்டு, இவை யாவற்றையும் எடுத்து நோக்கும் பொழுது அவரின் பிறப்பு தமிழ்ச்சமூகத்துக் குக்கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் என்றே கொள்ளலாம். பழமையில் வளர்ந்தாலும் புதுமையில் பயணித்தார். தனித்தமிழ் விரும்பினாலும் பன்மொழிப்புலமையி னையும் ஒதுக்கிவிட விரும்பவில்லை. மரபிலே முகிழ்த்தாலும் விஞ்ஞானம் அவரை விரிபுபடுத்தியது. அதனால் குறுகிய பாதைகள் குறுக்கிடுவதை ஒதுக்கியே விட்டார். சித்தாந்த நிலையிலிருந்து வேதாந்த நிலைக்கு வந்தமையால் அவரின் நோக்கும் செயலும் பரந்து பட்டதாகவே காணப்பட்டது. கலைஞராய் விளங்கினார். அறிஞராய் விளங்கினார்.நிறைவில் துறவியாய் உயர்வு பெற்றார். தாமரை இலைத் தண் ணீராய் அடிகளார் வாழ்வு அமைந்திருந்தது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது. அவரின் உள்ளம் வெள்ளைக் கமலமாகவே இருந்தது என்பதை யாவருமே ஏற்றுக் கொள்ளுவார்கள்.

# முல்லையில் 239 கசிப்பு விற்பனை இடங்கள்: தடுக்க கடுமையான நடடிக்கைகள் தேவை

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய ஐந்து பிரதேசசெயலாளர் பிரிவுகளிலும் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபடுபவர்களாக 239பேர் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், வெலிஓயா பிரதேசசெயலாளர் இதுதொடர்பில் தரவுகளைத் திரட்டும்போது அச்சுறுத்தல்களுக்கு உள்ளானமையால், இதுதொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கமுடியவில்லையெனவும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் புதன்கிழமை சுட்டிக்காட்டப்பட்டது.

இந் நிலையில் சட்டவிரோத மது மற்றும் போதைப்பொருள்களைத் தடுக்க மிகக் கடுமையான நடவடிக்கைதேவை என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மதுவிற்பனையில் ஈடுபடுபவர்களாக கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 87பேரும், புதுக்குடியிருப்பில், 28பேரும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 50பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 34பேரும், மாந்தைகிழக்கு பிரதேசத்தில் 40பேருமாக முல்லைத்தீவுமாவட்டத்தில் மொத்தம் 239நபர்கள் சட்டவிரோத மதுவிற்பனையில் ஈடுபடுவதாக இங்கே சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு சட்டவிரோத மது விற்பனையாளர்கள் தொடர்பில் விவரங்களைத் திரட்டும்போது அச்சுறுத்தல் நிலைமைகள் ஏற்பட்டதாகத் தெரிவித்து வெலிஓயா பிரதேசசெயலாளரால் இதுதொடர்பானஅறிக்கையைளிக்கமுடியாமல்போனதாகவும் இதிலே சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையிலே அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையால் அதிகளவானோர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழக்கின்ற நிலமைகள் காணப்படுகின்றன.

பலகிராமங்களுக்கு மக்கள் குறைகேள் சந்திப்பிற்காகச் சென்றபோது மக்கள் போதைப்பொருள் ஊடுருவல்கள் அதிகரித்துள்ளமைதொடர்பிலும், அதனால் ஏற்படுகின்ற மிக மோசமானபாதிப்பு நிலமைகள் குறித்தும் முறையிட்டு கண்ணீர் வடிக்கின்றனர்.

குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகப் பிரிவிற்குட்பட்ட நான்கு கிராமங்களில் ஏறக்குறைய 48பேரளவில் போதைப் பொருள்பாவனையால் உயிரிழந்துள்ளதாகமக்கள் முறையிட்டனர்.

அதேபோல் 2009ஆம் ஆண்டிற்கு முன்னர், விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்வாறான போதைப்பொருள் ஊடுருவல்களும், பாவனைகளும் இருக்கவில்லை.

முல்லைத்தீவுமாவட்டத்தில்அதிகளவான அரசபடையினர் காணப்படுகின்றனர். குறிப்பாக இரண்டு பொதுமக்களுக்கு ஒரு படையினர்காணப்படுகின்றனர்.



இவ்வாறு அதிகளவான படையின் இருக்கத்தக்கதாக இவ்வாறுபோதைப்பொருள்ஊடுருவல்களும்,போதைப்பொருள் பாவனைகளும் அதிகரித்திருக்கின்றன. இது தொடர்பில் உரிய தரப்பினர் ஏன் கவனம்செலுத்தவில்லை.

அதேவேளை சில பொலிஸாருக்கும் போதைப் பொருள் விற்பனையாளர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதாகவும் மக்கள் எம்மிடம் முறையிடுகின்றனர்.

இந்நிலையில் போதைப்பொருள் விற்பனையாளர்களின் தரவுகள் ஒவ்வொரு பிரதேசசெயலாளர்களிடமும் கோரப்பட்ட நிலையில், இதுதொடர்பில் தரவுகளைச் சேகரித்தால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென வெலிஓயா பிரதேசசெயலாளர் தெரிவித்திருக்கின்றார். அவ்வாறாயின் இங்கு யாருடைய அரசாங்கம் நடக்கின்றது. இவ்வாறாக சட்டம் ஒழுங்குகளை மீறுகின்ற வகையிலான செயற்பாடுகள் இடம்பெறுமாயின் இங்கு பொலிஸார் எதற்கு.

இந் நிலைரில் அரசாங்கம் திட்டமிட்டு போதைபொருள் ஊடுருவல்களை எமது பகுதிகளிலமேற்கொள்வதாகவும் மக்களால் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படுகின்றன.

இந் நிலையில் கசிப்பு,கஞ்சா, ஐஸ் என பல்வேறு போதைப்பொருள் ஊடுருவல்கள் அதிகரித்திருக்கின்றன.

இத்தகைய சூழலில் ஆளுநர், கூட்டுறவுப் பிரதியமைச்சர், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர், உரிய அதிகாரிகள் அனைவருமாக இந்த விடயம் தொடர்பில் மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து இத்தகைய போதைப்பொருள் ஊடுருவல்கள், பாவனைகளைத் தடுக்கவேண்டும்.

இல்லையேல் சிறிய காலத்திற்குப் பிற்பாடு இங்கு மக்க வசிக்கமாட்டார்கள், கசிப்பு உற்பத்திசெய்யப்படும் பானைகளும் தளபாடங்களுமே காணப்படும். இவ்வாறாக இந்த விடயத்தில் நிலமைகள் மோசமடைந்துசெல்கின்றன.

இந்தநிலைமைகள் தொடர்ந்தால் தேசியமக்கள் சக்தி அரசாங்கத்தையும் மக்கள் வெறுக்கவேண்டிய மக்கள் வெறுக்கக்கூடிய நிலை உருவாகும்.

எனவே இந்தவிடயத்தில் கூடிய கவனம் செலுத்தி சட்டவிரோத போதைப்பொருள்களைத் தடுப்பதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படவேண்டும். – என்றார்.



# பூநகரி பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டன

பூநகரிபிரதேசசபைக்கானவேட்புமனுஏற்கும் பணி நேற்று நண்பகல் நிறைவடைந்த நிலையில் பூநகரி பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக சமர்ப்பித்த அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரான மாவட்ட அரசாங்கதிபர் எஸ்.முரளிதரன் மற்றும் மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் வேலாயுதம் சிவராசா ஆகியோர் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தனர்.

ஏழு அரசியல் கட்சியும் இரண்டு சுயேச'சைக்குழுக்களும் தங்களுடைய வேட்பு மனுவை தாக்கல் செய்த நிலையில் அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன எனவும் ஏனைய உள்ளூர் அதிகார சபைகளுக்கு தேர்தல் நடைபெறுகின்ற திகதியான மே மாதம் ஆறாம் திகதியே பூநகரி பிரதேச சபைக்கான தேர்தலும் நடைபெறும் எனத் தெரிவித்தனர். 316



# அம்பாறை ஒலுவில் துறைமுக செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமாம்


## அமைச்சர் சந்திரசேகரன் உறுதி

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

ஒலுவில் துறைமுகத்துக்கு அமைச்சர் புதன்கிழமை கண்காணிப்பு பயணம் மேற்கொண்டிருந்தார். அமைச்சருடன், அமைச்சின் செயலாளரும் உடனிருந்தார்.

துறைமுகத்தை அமைச்சர் பார்வையிட்டதுடன், பல தரப்பினருடனும் சந்திப்புகளில் ஈடுபட்டு கருத்தகளை கேட்டறிந்துகொண்டார்.

இந்நிலையிலேயே கைவிடப்பட்டுள்ள நிலையில் இருக்கும் ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் அவதானம் செலுத்தியுள்ளதுடன், இதற்குரிய நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.



இலங்கையில் கடற்றொழிலை மேம்படுத்துவதற்கு உள்நாட்டு துறைமுகங்களை மேம்படுத்துவதை கடற்றொழில் அமைச்சு பிரதான இலக்குகளுள் ஒன்றாக கருதி செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனங்களில் கிழக்கிற்கு முன்னுரிமையைத் தாருங்கள்

## அம்பாறை எம்.பி உதுமாலெப்பை கோரிக்கை

(ஹமீட்)

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு கல்விக்கல்லூரி நியமனங்களில் முன்னுரிமை வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் ஊேசழக: நாலகே கலுவானயினை கல்வி அமைச்சில் இன்று 27.03.2025 சந்தித்த அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கோரிக்கை விடுத்தார்.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு (பொது) -186

ஆரம்பப் பிரிவு ஆங்கிலம் - 260

கணிதம் - 310

வரலாறு - 148

இவ்வாறான வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருப்பதால் கிழக்கு மாகாணக் கல்வியில் பாரிய பின்னடைவு காணப்படுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை கேட்டுக்கொண்டார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கு மாகாண பாடசாலைகளிலே நியமனம் செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

இவ்விடயங்களை கேட்டறிந்த செயலாளர் அதற்குறிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயலாளர் சமால்தீனும் கலந்துகொண்டார்.



# கற்பிட்டி பிரதேச சபையின் வேட்பாளர்களுக்கான செலவு அறிக்கை குறித்த விழிப்பூட்டல் செயலமர்வு

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிடும்வேட்பாளர்களுக்கான செலவு அறிக்கையிடல் தொடர்பான தெளிவூட்டும் செயலமர்வு ஒன்று கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.



புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் காரியாலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி தெளிவூட்டும் செயலமர்வில் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் கால செலவு அறிக்கைகள் எவ்வாறு தயார் செய்யப்பட வேண்டும் அதற்கான விதிமுறைகள் மற்றும் அவைகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அறிக்கையிடப்பட்டு சமர்ப்பிப்பதன் ஊடாக வேட்பாளர்கள் தம்மை சட்ட சிக்கல் ஏற்படாத வண்ணம் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பன பற்றியும் தெளிவூட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# வலிகாமம் தெற்குப் பிரதேச சபையில் 18 வட்டாரங்களையும் கைப்பற்றுவோம்

## முன்னாள் தவிசாளர் பிரகாஷ் உறுதி

வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் நிச்சயம் நாம் அதன் 18 வட்டாரங்களையும் கைப்பற்றியே தீருவோம் என தமிழரசுக் கட்சி மானிப்பாய் தொகுதித் தலைவரும் முன்னாள் தவிசாளருமான தியாகராஜா பிரகாஷ் தெரிவித்தார்.

மருதனார்மடத்தில் அமைந்துள்ள கஜா றெஸ்ற் விருந்தினர்விடுதியில்புதன்கிழமைகாலைநடைபெற்ற வேட்பாளர் அறிமுகமும் அதன் பின் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பும் நிகழ்வின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அதில் தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தமிழ் கட்சிகளின் ஒற்றுமையை விரும்புகின்றார்கள். அதன் அடிப்படையில் கடந்த தேர்தலில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியில் போட்டியிட்டு வட்டாரத்தில் வெற்றிபெற்றவர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் போட்டியிட்டு வட்டாரத்தில் வெற்றிபெற்றவர், ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு வட்டாரத்தில் வெற்றிபெற்ற இருவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு வட்டாரத்தில் வெற்றிபெற்றவர், உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டு சொற்ப வாக்கினால் வெற்றிவாய்ப்பை இழந்து, நியமன உறுப்பினராக கடந்தமுறை பிரதேச சபைக்கு நியமிக்கப்பட்டவர் என கட்சிபேதம் கடந்து நிலைபேறான நீடித்த பிரதேச அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அனைவரும் ஒரு குடையின்கீழே - கட்சி பேதங்களை மறந்து பிரதேச அபிவிருத்தி என்ற ஒரு குடையின் கீழே தமிழரசுக் கட்சியின் கீழே திரண்டுள்ளார்கள்.

மக்களால் நன்கு அறியப்பட்ட - மக்களின் நன்மதிப்பைப்பெற்ற - பல்வேறு சமூகப் பணியில்தம்மை இணைத்து, பல சேவைகளை ஆற்றிவருகின்றவர்களையேநாம்வேட்பாளராக நிறுத்தியுள்ளோம். மக்கள் ஏற்பவர்களை நாம் நிறுத்தியுள்ளோம்என்பதால்-அத்தனைபேரும் இளைஞர்களாக இருப்பதால் -நிச்சயம் மக்கள் தமிழ் உணர்வோடு அவர்களுக்கு வாக்களிப்பார்கள் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. தமிழரசுக் கட்சியின் ஆட்சி நிச்சயம் மலரும். மக்களுக்கு சுபிட்சமான எதிர்காலம் மலரும்.



ஆகவே, வாக்குகளை வீணடிக்காமல் அனைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னமாகிய வீட்டுக்கு வாக்களித்து எமது பிரதேசத்தை நாமே ஆளுகின்ற ஆணையைத் தாருங்கள். - என்றார்.

இதன்போது மாற்றுக் கட்சிகளில் இருந்து வந்தவர்களிடம் கடந்த முன்னர் தாங்கள் அங்கம் வகித்த கட்சித் தலைமையுடன் முரண்பட்டா இங்கு அணிதிரண்டீர்கள் என ஊடகவியலாளர்கள் கேட்டதற்கு, அனைவருடைய பதிலும் 'இல்லை' என்றும், தாம் சுயமாக மக்கள் நன்மைகருதி காலத்தில் தேவை இதுவெனக்கருதியே திரண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் 2011, 2018 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் வெற்றிபெற்று வலி.தெற்கு பிரதேச சபையில் முன்னாள் உறுப்பினராக இருந்த அரிகரன் கருத்துத் தெரிவிக்கையில் -

கட்சி ரீதியாக அல்லாது பிரகாஷ் என்ற தனிமனிதன் எடுத்த முயற்சியினால் நாம் ஒன்று சேர்ந்துள்ளோம். 2011 காலப்பகுதியில் அவர் தவிசாளராக இருக்கும்போது நான் உறுப்பினராக இருந்திருக்கின்றேன். அந்தக் காலத்தில் அவரின் தலைமைத்துவம், ஆளுமை என்பவை தொடர்பில் நான் நன்கு அறிவேன். எமது சபை எந்தப் பிரச்சினையுமில்லாத சபை எனப் பெயர் பெற்றது.

இந்தத் தேர்தலில் நாம் சுயேட்சைக் குழுவாக போட்டியிடலாம் என்று தீர்மானித்தோம். அது மக்கள் மத்தியில் எவ்வளவு செல்வாக்கு செலுத்தும் என்ற ஐயம் இருந்தது. அந்தநேரத்தில்தான், பிரகாஷ் எம்மைஅணுகிஇவ்வாறானஅழைப்பைவிடுத்தார். அதற்கு முழுமனதோடு நாம் இணங்கினோம். இதனால் எமக்கு தோழருடன் எந்த முரண்பாடும் கிடையாது. இது எமது தனிப்பட்ட முடிவு.

பிரகாஷை தமிழரசுக் கட்சி நம்புகின்றது. நாம் தலைவர் பிரகாஷை நம்புகின்றோம். - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2025இல் வெளியிடப்பெற்றது